KALANILAYAM

தனிப்பிரதி விலை அணு 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 7.] 1934 ஷ டிசம்பர் மீ 20 உ [No. 50

பொருளடக்கம்.

1.	தலையங்கம் (Leader)	785
2.	தமிழ்ப்பாடம் — (இலக்கணம்)	786
3.	இரத்நாவளி (அங்கம் 5. களம் 1, 2.) வடமொழி நாடக மொழிபெயர்ப்பு	787
4.	கம்பராமாயணம் (அரசியற் படலம்) T. N. சேஷாசலம் B.A., B.L.	790
5.	நம்மாழ்வார் வைபவம் (7-ம் பத்து, 2-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L.	793
6.	தருமன் மாண்பு. K. T. விஜயராகவாசாரியார் B.A.	795
7.	அண்டங்கள். E. T. இராஜேஸ்வரி அம்மாள் M.A., L.T.	796
8.	வர்த்தமானம்	797
9.	அட்டவணை.	798

கலாநிலயம்

ஏழாவதாண்டின் நிறைவு.

இவ்விதழுடன் கலாநிலயத்தின் ஏழாவது ஆண்டு நிறைகின்றது. கடவுளின் கருணையால் கலாநிலயத்திற்கு உண்மை நண்பர்களாய் வாய்த்த ஸ்ரீமான் S.Rm.Ct.J. ஜம்புலிங்கம் செட்டியாரவர்களும், அவர் சகோதரர், ஸ்ரீமான் S. Rm. Ct.Pl. பழனியப்பச்செட்டியாரவர்களும், ஸ்ரீமான் S.Rm. Ct.A. அண்ணாமலைச் செட்டியாரவர்களும் எமக்கு உள்ளன்புடன் செய்து வருகின்ற உதவிக்கு நாம் மிக்க நன்றியுடையவர்களாயிருக்கின்றோம். இக்கலாநிலயம் நிகழ்த்தி வருகின்ற காரியங்களில் நம்பிக்கையுடைய எல்லோரும், இது நடந்து வருவதற்குத் துணையாயிருக்கின்ற இந்நண்பர்களை நன்றியுடன் நினைப்பார்கள் என்பதில் ஐயமில்லை. இவர் மூலமாக எமக்கு நட்பாகி, அவ்வப்போது எமக்கு அரிய உதவிகள் செய்து வருகின்ற நண்பர்கள் பலர். அன்னவர்க்கும், இதனிற்கு அவ்வப்போது சந்தா நண்பர்கள் சேர்த்தளித்து வருகின்ற ஏனைய நண்பர்களுக்கும் எமது வந்தனம் உரியதாகின்றது.

இக்கலாநிலயத்திற்குத் தளரா ஊக்கமுடன் அரிய கட்டுரைகள் உதவிவருகின்ற நண்பர்கள் அனைவர்க்கும் எங்கள் வந்தனத்தைச் செலுத்துகின்றோம்.

கலாநிலயத் தமிழ் வகுப்புக்கள் நன்கு நடைபெற்று வருகின்றன. காஞ்சீபுரத்தில் 1933-வது ஆண்டில் ஆரம்பமாகி ஸ்ரீமான் K. இராஜகோபாலாச்சாரியார் அவர்களால் நடத்தப்பெறுகின்ற தமிழ் வகுப்புக்கள் இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் பாடங்கள் முற்றி நிறைவடையும். சென்னைநகரில் முன்னைய வகுப்புக்களெல்லாம் நிறைவடைந்து புதிய வகுப்புக்கள், Y.M.C.A, ரிப்பன்பில்டிங்ஸ், திருவல்லிக்கேணி, சைதாப்பேட்டை, வில்லிவாக்கம், வண்ணாரப்பேட்டை, பிரம்பூர் ஆகிய இவ்வேழு இடங்களில் நடைபெற்று வருகின்றன. இவைகளில், பிரம்பூர் வகுப்பு, ஸ்ரீமான் T.A. கனகசபாபதி முதலியார் அவர்களாலும், வண்ணாரப்பேட்டை வகுப்பு, ஸ்ரீமான் T. R. வெங்கடாசலம் பிள்ளை அவர்களாலும், ஏனைய வகுப்புக்கள் ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் அவர்களாலும் நடத்தப் பெறுகின்றன. இவர்களுக்கு எம் வந்தனம் உரியதாகுக. இவ்வகுப்புக்களில் 500 பேர்களுக்குமேல் சேர்ந்து படிக்கின்றனர். பக

விற் பற்பல துறைகளில் ஈடுபட்டு இருக்கின்றாராஹுலும், மெய்வருத்தம் பாராமல், மாலையில், தமிழினைக் கற்று அதன் இன்பத்தையும் நன்மையையும் தம்முடைமை ஆக்கிக் கொள்ளவேண்டும் என்னும் ஊக்கமுடன் இவ்வகுப்புக்களில் சேர்ந்திருக்கின்றஇவர்களுடைய அன்பையும் ஆர்வத்தையும் பாராட்டுகின்றோம்.

அடுத்த இதழுடன் எட்டாவது ஆண்டு ஆரம்பமாகும். சலாநிலயம் நடந்துவருவதற்கு யாம் கடவுளினருளை முன்னிட்டுச் செய்துவருகின்ற முயற்சிகள் பலப்பல. இம் முயற்சிகளுக்குத் துணையாக எமது அன்புடைய நண்பர்கள் புரிய வேண்டிய உதவிகளும் பலவுள. முதலாவதாக,

இவ்விதழ் தம் கைக்கு எட்டியவுடன் புதுவருடச் சந்தாவை, எம் கடிதம், வி. பி. முதலிய வொன்றும் எதிர்பாராமல், எல்லோரும் மணியார்டர் மூலமாக அனுப்பி வைத்து உதவும்படி வேண்டுகின்றோம். ஒருமனதாய் இந்த உதவியை அனைவரும் செய்வாராயின், கலாநிலயம் நடைபெறுவதில் உள்ள இடுக்கண்களில் பெரும்பகுதி களையப்பெற்றதாகும்.

இதுகண்ட சில தினங்களுக்குள் தம் சந்தாவை அனுப்பிவைக்காதவர்களுக்கு முறைப்படி வி.பி. அனுப்புவோம். அதனை வந்தவுடன் பெற்றுக்கொண்டு ஆதரிக்கும்படி வேண்டுகின்றோம். எனினும், வி. பி. அனுப்புவதில் எங்களுக்கு உள்ள சிரமத்தையும் அவர்களுக்கு நேரும் செலவையுங் கருதி, முன்னரே தம் சந்தாவை மணியார்டரில் அனுப்பிவைப்பது உத்தமம். எது எவ்வாறாயினும், வந்த வி. பியைப் பெற்றுக்கொள்ளாமல் எமக்கு நஷ்டமுண்டாக்க இசையார் என்று நினைக்கின்றோம்.

மலேயா நாடுகளுக்கு வி. பி. அனுப்ப இயல்வதில்லை யாகையால், அங்கிருப்பவர், வி. பியை. எதிர்பாக்காமல் தாமே தம் சந்தாவை உடனே அனுப்பிவைக்கும்படி வேண்டிக்கொள்ளப்படுகின்றனர். நினைவுபடுத்தக் கடிதம் எழுதுவதென்றாலும் எமக்குச் செலவு அதிகமாகின்றது. 1934-வது வருடத்திய சந்தாவையே இன்னும்செலுத்தாதவர் அங்குச் சிலர் உளர். அதனுடன் புதுச் சந்தாவையுஞ் சேர்த்து உடனே அனுப்பித் தருமாறு வேண்டுகின்றோம். இல்லையேல் அவர்தம் கருத்தைத் தெரிவிக்கின்றவரையில், பத்திரிகையை அவர்களுக்கு அனுப்பாமல் நிறுத்திக் கொள்வது தவிர எமக்கு வேறு நெறியில்லை.

தம் சந்தாக்களை அனுப்புவதுடன், புதிய சந்தா நண்பர்களைச் சேர்த்து அவர் சந்தாவையும் அனுப்புமாறு எமது நண்பர்களைத் தனித்தனி வேண்டிக்கொள்கின்றோம்.

சென்னையில் உள்ளவர்கள் மாதவீதமாகவும் சந்தாவைக் கட்டலா மாகையால், இவ்வுதவிசெய்வது பின்னும் சிறிது எளிதாகலாம்.

மானேஜர்.

தமிழ்ப்பாடம் 150.

[779-வது பக்கத் தொடர்ச்சி]

இலக்கணம்

ளகர மெய்யீறு.

லகர மெய்யீற்றுப் புணர்ச்சிக்கும் ளகர மெய்யீற்றுப் புணர்ச்சிக்கும் பேதம் அதிகமில்லை. அவை பெரும்பாலும் ஒத்தே நடக்கும். லகரமெய் னகர மெய்யாகத் திரிகின்ற இடங்களில் ளகரமெய் ணகர மெய்யாகத் திரியுமென்றும், லகரமெய் றகர மெய்யாகத்திரிகின்ற இடங்களில் ளகரமெய் டகர மெய்யாகத் திரியுமென்றும் பொதுவாகக் கொள்ளலாம். ஆதலால் இதற்குரிய விதிகளைத்தனித்தனி யெடுத்தெழுதி விளக்குவது மிகை. வாசகர்கள் தாங்களே முயன்று விதிகளும் உதாரணங்களும் அமைத்துநோக்கி இவ் விறுதிப்பாடத்தைப் பயில்வது நலம். எனினும் சிற்சில உதாரணங்களை மாத்திரம் இங்குக் காட்டுவோம்.

1. கல் + யானை = கல்யானை, கல்லியானை.
   புள் + யாது = புள்யாது, புள்ளியாது.
   வருமொழி முதலில் யகரம் வர, இயல்பாகவேனும், இகரம்தோன்றியேனும்புணரலாம்.
2. வில் + வளைத்தான் = வில்வளைத்தான்.
   கள் + விற்றான் = கள்விற்றான்.
   வருமொழி முதலில் வகரம்வர இயல்பாய்ப் புணர்ந்தது.
3. தோல் + முரசு = தோன்முரசு.
   முள் + முகை = முண்முகை.
   வருமொழி முதலில் மெல்லினம்வர, ணகரமாகத் திரிந்தது.
4. கல் + நாய் = கன்னாய்.
   புள் + நகம் = புண்ணகம்.
   நிலைமொழி யீற்று ளகர மெய் வருமொழி முதல் நகர மெய் வர, ணகர மெய்யாகத் திரிந்து புணர்ந்தது.
5. கால் + நாழி = கானாழி.
   வாள் + நுனி = வாணுனி.
   வருமொழிமுதல் நகரம் ணகரமாகத்திரிவதுடன் நிலைமொழி யீற்று ளகரமெய் கெட்டது.
6. தோல் + செருப்பு = தோற்செருப்பு.

வாள் + கை = வாட்கை.

உருபும் பயனும் உடன் தொக்க வேற்றுமைத் தொகையில், வருமொழி முதலில் வல்லினமெய் வர நிலைமொழியீற்று ளகரமெய் டகரமெய்யாகத் திரிந்தது.

7. வீட்டில் + கண்டேன் = வீட்டிற்கண்டேன்.
வீட்டினுள் + கண்டேன் = வீட்டினுட் கண்டேன்.

உருபின் ஈற்றினுள்ள ளகரமெய் டகரமெய்யாகத் திரிந்தது.

8. முகில் + படர்ந்தது = முகில் படர்ந்தது }
தேள் + புகுந்தது = தேள்புகுந்தது. }

கால் + பிடித்தான் = கால் பிடித்தான் }
தோள் + பற்றினன் தோள்பற்றினன் }

கொல் + களிறு = கொல் களிறு }
கொள் + கலம் = கொள் கலம் }

பேசேல் + பாவாய் = பேசேல் பாவாய். }
கண்டாள் + காரிகை = கண்டாள் காரிகை }

நிலைமொழியீற்று ளகரமெய்கள், வருமொழிமுதலில் வல்லினமெய் வர, இயல்பாய்ப் புணர்ந்தன.

9. கொடியாள் + தடமார்பு = கொடியாடடமார்பு.
இருள் + தனை = இருடனை.
இவள் + தன்மை = இவடன்மை.
வாள் + தானை = வாட்டானை.
புள் + தோகை = புட்டோகை.

நிலைமொழியீற்றில் ளகரமெய் நிற்க வருமொழி முதலில்வரும் தகரமெய் டகரமெய்யாகத் திரிந்தும், நிலைமொழியீற்று ளகரமெய் கெட்டும், டகரமெய்யாகத் திரிந்தும் புணர்ந்தன.

உயிரீறு மெய்யீறு ஆகிய ஈறுகளுக்கு யாம் இதுகாறும் உரைத்துள்ள விதிகளை மனதிற் கொண்டு, நமது வாசகர்கள் இலக்கிய நூல்களைப் படித்துக் கொள்ளும்போது ஆங்காங்குச் சொற்கள் புணர்ந்திருக்கும் விதங்களை இவ்விதிகளுக்கு இணங்கி நோக்கிப் பயிலல் வேண்டும். அவைகளில் எவையேனும் இவ்விதிகளுக்குள் அடங்காதனபோல்தோன்றினல், நன்முக ஆராய்ந்து அவ்வாறு வருகின்ற பிற உதாரணங்களையும் ஒன்று சேர்த்து எவ்விதியில் அடக்கலாம் என்று சிந்திக்க முயல்வது பயன் தரும்.

இதனுடன் நம் தமிழ்ப்பாடம் முடிகின்றது. அடுத்த வாண்டிலிருந்து இங்ஙீ உரையுடன்வரும் 'சூளாமணியை' இலக்கியப் பாடமாகப் படித்துக்கொள்ள விரும்புவோர் அவ்வாறு செய்யலாம். இலக்கணப் பகுதிக்கு இனி அணியிலக்கணம் ஆரம்பமாகும்.

தமிழ்ப்பாடம் முற்றிற்று.

இரத்நாவளி

[776-ம் பக்கத் தொடர்ச்சி]

அங்கம் 5. களம் 1.

வஸுபூதியையும் பப்ரவ்யனையும் அழைத்துக் கொண்டு வஸந்தகன் வருகின்றான்.

வஸந்:—இவ்வழி.

வஸுபூதி:—இவ்வரண்மனையைச்சூழ்ந்துள்ளசோலைகள் கண்ணுக்கினிய காட்சியளிக்கின்றன. அழகிய குதிரைகளும் பருத்த யானைகளும் பார்த்தற்குரியன. எங்கும் இசைக்கும் கீதங்களைக் கேட்டு நம்செவிகள் குளிர்கின்றன: கடைவாயிலில் காத்திருக்கும் வேந்தருடன் கலந்து நம் இதயம் களிக்கின்றது. இதற்கு முன், எங்கள் ஸிம்ஹள மன்னவனது அரசு மங்கித் தோன்றுகிறது. இவ்வரண்மனையின் ஒவ்வொருபாகமும் என்உள்ளத்தைக் கொள்ளைகொள்கின்றது.

பப்ரவ்ய:—என்தலைவனை மீண்டும் காணவேண்டும் என்னும் ஆசையினல் என் மனம் வேறெதனிலும் செல்லவில்லை.

வஸந்:—ஐயன்மீர், வாருங்கள்.

வஸுபூதி:—(வஸந்தகன் கழுத்திலிருந்த இரத்தின ஆரத்தை உற்று நோக்கி) பப்ரவ்யா, அம்மணிமாலையை அறியாயோ நீ? நம் அரசன் தன் புதல்விக்குக் கொடுத்ததன்றோ அது!

பப்ரவ்:—அப்படித்தான்தோன்றுகின்றது. அதனை எங்ஙனம் அடைந்தனன் என்று நான் வஸந்தகனைக் கேட்கட்டுமா?

வஸுபூதி:— வேண்டா, வேண்டா; அன்னதே போன்ற வேறோர் மாலை இவ்வரசனிடம் இருத்தல் அருமையன்றே.

[வத்ஸராஜனும் வாஸவதத்தையும் வருகின்றனர்]

வஸந்:— மன்னர்பெருமான் வருகின்றான்.

வஸுபூதி:— மன்னவா, போற்றி!

வத்ஸ:— வந்தனம், ஐய, வருக.

வஸுபூதி:— நினக்கு மங்கள முண்டாகுக.

வத்ஸ:— மந்திரிக்கு ஓர் ஆதனம் அளி.

வஸந்:— (தன் மேலாடையை விரித்து) இதோ ஆதனம்.

பப்ரவ்ய:— அரசே, வணங்குகின்றேன்.

வத்ஸ:— பப்ரவ்யா, இங்கே அமர்.

வஸந்:—ஏ, மந்திரி, எங்கள் அரசி வாஸவதத்தை இவள்.

வாஸவ:—மந்திரத் தலைவ, நினக்கு வந்தனம்.

வஸுபூ:—தன் தந்தையையே ஒக்க ஓர் புதல்வன் நினக்கு வாய்ப்பதாக.

பப்ரவ்ய:—பெருமாட்டி, வணங்குகின்றேன்.

வத்ஸ:—நன்று, வஸுபூதி, ஸிம்ஹள மன்னவன் எவ்வாறுளன்?

வஸுபூ:—(பெருமூச்சுவிட்டு) என்னவோ புதில் இயம்புவேன்.

வாஸவ:—(ஒரு புறமாய்) ஏன் இப்படித் தயங்குகின்றான்!

வத்ஸ:— ஏன் இப்படிக் கவல்கின்றாய்?

பப்ரவ்:— (வஸுபூதிக்கு) தயங்கித் தயங்கிப் பயனில்லை. சொல்ல வேண்டியதை உடனே சொல்லிவிடுவதே நலம்.

வஸுபூ:—ஐயனே, நிகழ்ந்ததைச் சொல்வதற்கு நாவெழவில்லை. இருப்பினும் முயன்று சொல்வேன். எங்கள் அரசனது புதல்வி இரத்நாவளியை மணப்பவன் இவ்வுலகினிற்கெல்லாம் சக்ரவர்த்தியாவான் என்று வருவதறிந்த ஓர் முனிவருரைத்ததுகொண்டு, நின் மந்திரக்கிழவன் யௌகந்தராயன், அவளை நினக்களிக்குமாறு எம்மரசனை வேண்டியது நீ யறிவாய். எங்கள் அரசனோ, வாஸவதத்தையின் மனம் இதனுல் நோகுமே என அஞ்சி இதற்கு இணங்கவில்லை.

வத்ஸ:—(வாஸவதத்தைக்கு ஒரு புறமாய்) என் அன்பே, நின் மாதுலன் தூதன் இவன் உரைக்கும்

பொய்கள் இவை மிக்க விந்தையாயிருக்கின்றன அல்லவா?

வாஸவ:—தலைவா, யாரை இப்பொழுது நம்பலாமென மதிக்க என்னால் இயலவில்லை.

வஸந்:—(வஸுபூதிக்கு) நன்று, அக்கோமகள் இப்பொழுது எங்கு இருக்கின்றாள்?

வஸுபூ:—பிறகு, வாஸவதத்தை விண்ணுலகம் சேர்ந்தனள் என்னும் செய்தி கேட்டு எங்களரசன், வத்ஸராஜனுக்குத் தன் புதல்வியைத் தருதற் கிசைந்தான். அவளை நாங்கள் அழைத்துக்கொண்டு வருங்கால், எங்கள் கப்பல் உடைந்தது. (அழுகின்றான்)

வாஸவ:—ஐயகோ! என் மனம் நடுங்குகின்றதே. எனது அருமைத்தங்கை இரத்நாவளியே, எங்கிருக்கின்றாயோ! ஏன் என்று என் அருந்துயரை அகற்றத்தான் மாட்டாயோ!

வத்ஸ:—கவலாதே. விதியானது தான் செய்யும் வருத்தத்தைத் தானே தீர்த்தலுங்கூடும் (வஸுபூதியையும் பப்ரவ்யனையுங் காட்டி) இவர் தப்பவில்லையா?

வாஸவ:—அப்படியே நானும் வேண்டுகின்றேன்; ஆயினும் விதியோ என்பால் நட்புடன் நடக்கவில்லை.

[உள்ளே ஆரவாரம்:—மண்டபங்கள் தீப்பற்றி எரிகின்றன. அரண்மனைக் கூரையில் பொன் தகடு வேய்ந்தது போல் அழல் தவழ்கின்றது. புகைப்படலம் எங்கும் சுழல்கிறது. அனலை ஆற்றமுடியாமல் மாதரெல்லாம் நடுங்குகின்றனர். "ஐயகோ! நமது அரசி லவனகை என்னும் இடத்தில் எரிந்துவிட்டாள் என்று பொய்யாய்ப் புகன்ற வதந்தி இப்பொழுது மெய்யே ஆகிவிடுமே" என்று புலம்புங் குரல் கேட்கின்றது.

வத்ஸ:—(திடுக்கிட்டு) வாஸவத்தை எரிந்தழிந்தனளா! என் தலைவி! எனதன்பே!

வாஸவ:— என்ன பேதைமை யிது - நின்னருகில் இக்காலம் நிற்கவில்லையோ நான். மற்று, ஐயகோ! என் செய்வேன், என் செய்வேன், என் தலைவா, என் செய்வேன்.

வத்ஸ:—(அவளைத் தழுவிக்கொண்டு) எனதன்பே, ஏன் கவல்கின்றாய்!

வாஸவ:—என்னைப்பற்றி யான் கவலவில்லை. மற்று, அவ்வேழை ஸாகரிகை யாதாவாளோ! விலங்கிட்டு வைத்திருக்கின்றேனே! சிறைப்பட்டன்றோ இருக்கின்றாள்! துணையின்றி இறந்துவிடுவாளே! விரைந்து சென்று அவளைக் காத்தல் வேண்டுமே!

வத்ஸ:—ஸாகரிகை ஆபத்திலிருக்கின்றாளா! அவளைக் காப்பதற்கு இதோ பாய்கின்றேன் நான்.

வஸுபூதி:-ஐயனே, வெறிகொண்டு நீ விரையாதே. விட்டிலின் மூடத்தனமன்றோ இது!

பப்ரவ்யன்:—ஐயனே, வஸுபூதி உரைப்பதைக் கேள்.

வஸந்:—(அரசனது அங்கியைப் பற்றிக்கொண்டு) நில் நில், அத்தீயிடைச் செல்லல் வெறும் பித்தமே.

வத்ஸ:—மூடா, என்னை விடு; ஸாகரிகை அழிந்தபின் நான் உயிர்வாழ்வேன் என எண்ணுகிறாயோ நீ.

பப்ரவ்ய:—என்னவிது! இவ் வற்பவிஷயம்பற்றிப் பாதவம்சமே அற்றுவிடுவதா! என்ன வரினும், நான் என் கடமையைச் செய்வேன்.

வத்ஸ:—தின்று தீர்க்குங் கொடுந் தீயே, நில் நில்! நின் ஒளிச்சுருள் உயர உயரச் சூழும் புகையை நிறுத்திக்கொள். பார் பார்! ஸாகரிகையின் கதியையே நானும் அடையவருகின்றேன். அப்பெண் இருக்கும் சிறைக்கூடத்தைச் சூழவருகின்றது நெருப்பு; அதுவும் நன்றே. அதன் ஒளியினால் அவள் இருக்கின்ற இடத்தை எளிதில் தெரிந்துகொள்வேன்.

[விரைந்து பாய்கின்றான்]

வாஸவ:—நான் பிதற்றிய சொற்களே அரசனுக்கு இக்கடுந்துயர் விளைத்தன. அவனை இழந்து எங்ஙனம் வாழ்வேன். தலைவா, இதோ நானும் வருகின்றேன்.

வஸந்:—பெருமாட்டி, பின் நிற்பவன் நானல்லன்.

[அரசியும் வஸந்தகனும் போகின்றனர்]

வஸுபூதி:—வத்ஸராஜன் தீயினுள் பாய்ந்துவிட்டான். இன்னவர் கதியைக்கண்டபின், நானும் என்னுயிரை ஈவதன்றி வேறென்ன செய்வதற்கிருக்கின்றது. (போகிறான்)

பப்ரவ்யன்:—ஆஹா! பாதவம்சம் காரணமின்றி இப்படியா அழிதல் வேண்டும். நானோ இனிக் காலந்தாழ்ப்பதன் பயன் என்ன—என்னுடைய நட்பின் உறுதியையுங் காட்டித்தருவேன்.

[போகின்றான்]

களம் 2.

இடம்:—தீப்பற்றி எரிகின்ற அரண்மனை.

ஸாகரிகை விலங்குபூண்டு நிற்கிறாள்.

ஸாகரி:—எப்பக்கமும் இந்நெருப்பு என்னைச் சூழ்கின்றது. அனலின் செல்வனே, என் துயரத்தை முடிக்கின்றாய். உனக்கு மிக்க வந்தனம்.

[வத்ஸராஜன் வருகின்றான்]

வத்ஸ:—ஆம் ஆம், ஸாகரிகையே இவள். ஐயோ! தனியே துணையின்றித் தவிக்கின்றாளே.

ஸாகரி:—(தனக்குள்) அரசனே அவன்! அவனைக் கண்டவளவிலே என் உயிர் நம்பிக்கையுறுகின்றது. (அவனைநோக்கி) ஐயனே! காவாயோ என் ஆவியை!

வத்ஸ:—அஞ்சேல். ஒரேகணம் இச் சூழுஞ்சுடரைப் பொறுத்திரு. ஹா! நின் மார்பின்மீதுள்ள உத்தரீயம் தீப்பற்றியதே (அதனைப் பறித்தெறிகிறான்). நின் காலின் விலங்கு நடையைத் தடுக்கின்றது. நான் தாங்குகின்றேன். எனதன்பே, என்னைத் தழுவிக்கொள். (அவளைக் கைகளில் தூக்கிக்கொள்கிறான்). தீயும் தணியத் தலைப்படுகின்றது-உள்ளந் தளராதே. காதலி, நீ தீண்டக் கனலுங் குளிர்கின்றதென்றால், அஃதுன்னை என்ன செய்யும். (நாற்புறமும் பார்த்துத் தன் கண்களை மூடித்திறக்கின்றான்). என்ன என்னவிது! கொழுந்துவிட்டெரிந்த நெருப்பெல்லாம் எங்கே! அனலொன்றுங் காணேன்; அரண்மனையுந் தீதின்றி நிற்கின்றது. ஹா! அவந்திமன்னன் அருமைப் புதல்வி!

[வாஸவதத்தை விரைந்துவந்து வத்ஸராஜன் கரங்களிற் புகுகின்றாள்.]

வாஸவ:—அன்புடைய என் தலைவ!

[வஸுபூதியும் பப்ரவ்யனும் வஸந்தகனும் வருகின்றனர்.]

வத்ஸ:—நண்பர்காள்!

வஸுபூ:- விதியோ நின்பால் நல்லதாகவே இருக்கின்றது.

வத்ஸ:—கனவா இது, அல்லது இந்திரஜாலமோ!

வஸந்:—பின்னது தான். அவ் வடிமைமகன் மந்திரவாதி, இன்னும் நாம் காண்பதற்குச் சில இருப்பதாகக் கூறினனல்லனோ!

வத்ஸ:—(அரசியை நோக்கி) என்னருமரசியே, உன் கட்டளைப்படியே இதோ ஸாகரிகையைக் காப்பாற்றிவிட்டேன்.

வாஸவ:—(சிரித்து) தலைவ, என் கட்டளைக்கு நீ கீழ்ப்படிகின்ற விதத்தை நன்கு அறிவேனே, நான்.

வஸுபூ:—(பப்ரவ்யனுக்கு) இவ்வனிதை எம்அரசிளங்குமரியையே ஒத்திருக்கின்றாள்; என்ன விந்தை இது.

பப்ரவ்:—எனக்கும் அப்படித்தான் தோன்றியது.

வஸுபூ:—அரசே, மன்னிக்க வேண்டும். இந்தப் பெண் எங்கிருந்து வந்தவள் ?

வத்ஸ:–அக்கேள்வி என் அரசியைக் கேட்கவேண்டும்.

வஸுபூ:—எம்பெருமாட்டி, இதனை எமக்குச் சொல்லியருள்வாயோ ?

வாஸவ:—யௌகந்தராயணன் இவளை எமக்கு அளித்தான். கடலிலிருந்து காப்பாற்றப்பெற்றவள் இவள் என்றும் அவன் கூறியுளன். ஆகையாற்றான் இவளுக்கு ஸாகரிகை யென்று பெயரிட்டோம்.

வத்ஸ:—(ஒரு புறமாய்) யௌகந்தராயணன் அளித்தானா! எனக்குச் சொல்லாமலா! அவனுடைய கருத்து யாவதா யிருத்தல்கூடும் ?

வஸுபூ:—(பப்ரவ்யனுக்கு) முகச்சாடை, இரத்தினமாலை, கடலிலிருந்து காப்பாற்றியது - இவள் ஸிம்மளமன்னவன் புதல்வி இரத்தினவளியே என்பதை நிச்சயமாக்கிவிட்டன. (அவளருகு சென்று) கோமகள் இரத்நாவளி, நின்னை யான் இந்நிலையிலோ காண்கின்றேன்.

ஸாகரி:—(அவனை உற்றுப் பார்த்து) ஆ, மந்திரத் தலைவா, வஸுபூதி!

வஸுபூ:—நான் சாகின்றேன்! (மூர்ச்சை யடைகின்றான்)

ஸாகரி:—சிறுவிதி யுடையேன் நானும் அழிகின்றேன். எந்தாய், என தன்னையே, நும் மகவு கூப்பிட ஏனென்று வாரீரோ (மூர்ச்சை யடைகின்றாள்.)

வாஸவ:—என்ன! பப்ரவ்யா, என் மாதுலன் ஒரு புதல்வி இரத்நாவளியா இவள் ?

பப்ரவ்:—ஆம்.

வாஸவ:—எழுந்திரு, இரத்நாவளி, எழுந்திரு. அகங்கரைந்து அழிந்திடாதே.

வத்ஸ:–ஸிம்மளவேந்தன் விக்ரமபாகுவின் புதல்வியா இவள்?

வஸந்:—அந்த இரத்தினமாலையைப் பார்த்தபொழுதே எனக்குச் சந்தேகம் உண்டாயிற்றே.

வஸுபூ:—(மூர்ச்சை தெளிந்து) எங்கள் மன்னவன் மாமகளே, எழுந்திரு. பெருமாட்டி வாஸவதத்தை எத்துணை வருந்துகின்றாள். அவளை அணைந்து கொண்டு அவள் பெருந் துயரத்தை ஆற்றுதல் நின் கடன்.

இரத்நாவளி:—அரசிக்குநான் அபராதம் அதிகம் செய்துளேன். அவள் முகத்தினை இனி நான் எங்ஙனம் நோக்குவேன்!

வாஸவ:—பேதைப் பெண்ணே, என்வயின் வாநின் தமக்கை என்னவே என்னை இனி நீ மதித்தல் வேண்டும். இக்கரங்களிற் புகுந்தென்னைக் களிக்கச் செய்(இரத்நாவளி காலெடுத்து வைக்கின்றாள், விலங்கு தடுக்கின்றது) தலைவ,என் கொடுமைக்குநான் மிக நாணுகின்றேன். விரைவுடன் அக்கொடியவிலங்கினை விலக்கு.

வத்ஸ:—வருந்தாதே. இதோ விலக்கிவிட்டேன். (விலங்கை நீக்குகின்றான்).

வஸந்:–இதனில், யௌகந்தராயணன் செய்துள்ள குற்றம் மிகப்பெரியது. உண்மையை அவன் அறிந்திருந்தும், ஒருவரிடத்திலும் ஒருவார்த்தை சொல்லி வைக்க வில்லையே.

[யௌகந்தராயணன் வருகின்றான்.]

யௌகந்:–தன் நாயகனைவிட்டுச் சிறிதுகாலம் பிரிந்திருக்க நேர்வதற்கும், அவன் வேறோர் வனிதையை மணங்கொள்வதற்கும் நம்அரசி வருந்தத்தான் வருந்துவாள். இதற்குக்காரணம் நானேஎன்பதுந் தெரிய வரும். ஆதலின் அவள்முகத்தைப் பார்ப்பதற்கு நாணுகின்றேன் நான். எனினும், என்னுடைய நோக்கத்தின் நன்மையைக்கருதி என்னைமன்னித்துவிடுவது மன்றி, இதனால் தன்தலைவன் இவ்வுலகத்தின் ஆட்சியை எய்துவதுபற்றி மகிழ்ச்சி மிகக் கொள்வாள் என்பதிலும் ஐயம் இல்லை. எது எவ்வாறாயினும், வேறு எதனையுஞ் சிந்திக்காமலே, எனதரசனுக்குரிய கடமையை நான் செய்து தீர்க்கவேண்டும். இதோ இருக்கின்றனர்—மன்னவா, நின்வெற்றி பெருகுக! ஐயனே, உன்னுடன் முன்னரே உசாவாமல், உன் நன்மைக்குரியன சில செய்திருப்பேனாயின், அதன் பொருட்டு என்னை மன்னித்தருள்வாய்.

வத்ஸ:-யாது செய்திருக்கின்றாய்,அதனைச் சொல்?

யௌகந்:—அரசே, இவ்வாதனத்தில் அமர்க; அனைத்தையும் இயம்புகின்றேன். ஸிம்மளதேயத்து மன்னவனது புதல்வியை மணப்பவன் இவ்வுலகத்திற்கு ஒரு சக்கிரவர்த்தியாவான் என்று ஒரு தூய மா முனிவர் நமக்கு முன்னொருநாள் கூறியுள்ளார்; ஆதலின், நின்னைத் தன் மருகனாய்க் கொள்ளும்படி அம் மன்னவனை வேண்டினேம். நின் கோப்பெருந்தேவி வாஸவதத்தைக்கு மனவருத்தம் இதனால் விளையுமெனஎண்ணி அவ்வேந்தன் எம்வேண்டுகோளினுக்கு இணங்க மறுத்தனன். அதன்மேல், லவனகா என்னுமிடத்தில் வாஸவதத்தை தீவாய்ப்பட்டமாய்ந்தனள் என்னுமோர் வதந்தியை விளைவித்து, அதனை ஸிம்மள மன்னவனுக்குச் சென்று சொல்லுமாறு பப்ரவ்யனை அனுப்பினேம்.

வத்ஸ:—அதன்பின்நிகழ்ந்தது எமக்குத்தெரியும். மற்று, அக்கோமகளை நம் அரசியுடன் வைகுமாறு அமர்த்திய தென்னவோ ?

வஸந்:—அவன்கருத்தை நான் தெரிந்துகொள்கின்றேன். அந்தப்புரத்தில் நீ அவளைக் கண்ணுற்று மகிழ்வதன் பொருட்டு.

வத்ஸ:—வஸந்தகன் சொல்வதே நின் கருத்தின் வாய்மையோ ?

யௌகந்:—வேந்தே, ஆம்.

வத்ஸ:–ஆயின், இந்த இந்திரஜாலக்காரன் இங்கு இப்பொழுது எய்தியதும் உன் சூழ்ச்சியில் அடங்கியிருக்கின்றதோ ?

யௌகந்:—வஸுபூதி அக்கோமகளைத் தெரிந்து கொள்வதற்கும், நீ அவளை அடைவதற்கும் இதுவே தக்க வழியாகக் கருதினேன்.

வத்ஸ:—(புன்னகை புரிந்து) நன்று, எம் தலைவி, நீ புதிதுபெற்று ஏற்றுக்கொண்ட உன் தங்கையை இனி என்ன செய்வதென்பது உன் கைகளில் இருக்கின்றது.

வாஸவ:—தலைவா, "இரத்நாவளியை என் கை தந்துவிடு" என்று வாய்திறந்து வெளிப்படையாகக் கேட்கலாமே.

வஸந்:—எம் பெருமாட்டி, மந்திரத் தலைவனது மதிநுட்பத்தைச் செவ்விதின் நீஅறிந்துகொண்டாய்.

வாஸவ:—வா இங்கு இரத்நாவளி, என் தங்கைக்குரிய பதவியைப் பூண்பாயாக. (அவள் கரங்களையெடுத்து வத்ஸராஜனுக்கு அளிக்கின்றாள்) என்தலைவ, இரத்நாவளியை யேற்றுக்கொள்.

வத்ஸ:—(அவள்கரங்களைப் பற்றிக்கொள்கிறான்) அரசியின்கொடையை யாரேஅங்கிகரிக்கமாட்டார்?

வாஸவ:—அரசே, தன் பெற்றோர்களை விட்டு நெடுந்தூரம் அகன்றிருக்கின்றாள் இவள். அவ்வருத்தந் தோன்றாமல் அவளைப் போற்றவேண்டியது நினது கடமை.

வத்ஸ:—நின் கட்டளையை மறுப்பேனோ, நான்.

வஸந்:—அரசே வாழி. இவ்வுலகம் முழுவதும் எம் அரசன் கைகளில் அடங்கிவிட்டது.

வஸுபூ:— எம்பெருமாட்டி, தேவி. யென்னும் பெயரை நீ தகவுடன் தாங்குகின்றாய்.

வத்ஸ:—என் கருத்தெல்லாம் கைவரப்பெற்றது.

யௌகந்:—மன்னவா, இதன்மேல் நான் செய்ய வேண்டுவதைப் பணித்தருள்வாய்.

வத்ஸ:—இன்னும் யாதுளது? விக்ரமபாகு என் மாதுலன் ஆயினான். வெற்றித் திரு, இவ்வுலகின் பெருமை, ஸாகரிகை, எனக்கே உரியவளாயினாள். தனக்கொரு தங்கை வாய்த்தாளென வாஸவதத்தையும் மகிழ்கின்றாள். கோசலர் அடங்கிவிட்டனர். யான் இனிவிரும்புதற்கு வேறினி இவ்வுலகில்யாது இருக்கின்றது. பருவமாரி பெய்து இந்திரன் இவ்வுலகத்தைக் காக்கட்டும்; அந்தணர்கள் வேள்விகள் ஆற்றி விண்ணவர் அருளை இவ்வுலகிற்குப் பெற்று அளிக்கட்டும்; பக்தியுடைய பெரியோர் சங்கங்கள் ஊழிவரையில் இவ்வுலகத்திற்கு இன்பத்தை ஊட்டட்டும்; தீயோர் நாவும் கையும் ஒருநாளும் அசையாமல் ஒடுங்கட்டும்.

(போகின்றனர்)

இரத்நாவளி முற்றிற்று.

கம்பராமாயணம்

கிஷ்கிந்தா காண்டம்—8. அரசியற் படலம்

[774-வது பக்கத் தொடர்ச்சி]

வியப்புறு மொழிகளை விளம்பினன் இராமன்.

தன்பால்வந்து சிலகாலந் தங்கியிருக்குமாறு இராமபிரானை வேண்டிய சுக்கிரீவன், நன்றிமறவா உள்ளமுடன்உவந்தழைத்தானென்றே கொள்ளல்வேண்டும். ஆயினும் இராகவன் அவ்வழைப்பினை யேற்றுக்கொள்ளவில்லை.

ஏந்தலு மிதனைக் கேளா
வின்னிள முறுவ லாற
வேந்தமை யிருக்கை யெம்போல்
விரதியர் விழைதற் கொவ்வா
போந்தவ ணிருப்பி னெம்மைப்
போற்றவே பொழுது போமால்
தேர்ந்தினி தியற்று மூன்ற
னரசியற் றருமந் தீர்தி

[இராமபிரானும் சுக்கிரீவன் சொன்னவைகளைக் கேட்டு, இனிமையான புன்சிரிப்புத் தோன்றச் சுக்கிரீவனை நோக்கி, "அரசர்க்கு ஏற்ற இடங்கள், எம்மைப்போன்ற விரதங்களை மேற்கொண்டவர் விரும்பத் தகுந்தவைகள் அல்ல. அன்றியும், அங்குக்கிஷ்கிந்தைக்குவந்து நாங்கள் தங்குவோமாயின், உன் காலமெல்லாம் எம்மை உபசரிப்பதிலேயே கழிந்துவிடும்; அதனால், நீ ஆராய்ந்து நன்கு நடத்தவேண்டியஉன் அரசிற்குரியகடமைகளைச் செய்யாமல் தவறினவன் ஆவாய்]

என்று சாற்றினான். இங்குக் காட்டிய இரண்டு காரணங்களும் சாலப் பொருந்தத் தக்கனவே. 'ஏழிரண்டாண்டு வனத்தின்கண் வைகுவேன்' என வாக்குத் தந்து அணிநகர் அயோத்தி நீங்கிய இராமபிரான் அதற்கு மாறாக ஒருநகரத்திற் சென்றமர்தல் அவ்விரதத்தைப் பிழைக்கச்செய்யும். மெய்ந்நெறிபூண்ட இம்மைந்தன் அதுபுரியான். எனினும், இவன் பின்னர்க் கூறிய காரணம் அதிகம் நுட்பம் வாய்ந்தது. காரியமுடையோர் கைகளைக் கட்டிவைப்பது விருந்தினர்வரவேபோல் வேறொன்றுமில்லை. தயரதன் ஜனகன்போன்ற மேன்மையோர் அரசராயின் அவர்தாம் அரசகாரியம் என்று யாதும் புரிதல்வேண்டா. சான்றோர் பலர் வாழும் ஊரிலே வசிப்பவர், ஆண்டுபலவாயினும் நரையிலர் ஆதலையறிந்துரைத்த பிசிராந்தையார் உணர்விற்கிணங்க, தயரதன் அனையோர் இருத்தலே அரசு நடப்பதற்கும் உலகம் நலமுறக் காக்கப் பெறுவதற்கும்போதும். சுக்கிரீவன் அன்னானல்லன்; தன் உழைப்பினால் அரசியல் தருமங்களை நிகழ்த்தற்குரியவன். ஆதலின், தம்மைஉபசரிப்பதில் அவனது காலமும்கருத்தும் இறையேனுஞ் செல்லலாகாதென்பதை இராகவன் உன்னி இங்ஙனம் இசைத்தனன். இசைத்து, மீண்டும்,

ஏழிரண் டாண்டி யான்போந்
தெரிவனத் திருக்க வென்றேன்
வாழியா யரசர் வைகும்
வளநகர் வைக லொல்லேன்
பாழியந் தடந்தோள் வீர
பார்த்திலை போலு மன்றே
யாழிசை மொழியோ டன்றி
யாதுறை யின்ப மென்னோ

[பதினான்குவருடம் நான்போய் நெருப்பைப்போன்ற கொடிய காட்டில் வசிப்பதாக உடன்பட்டுக் கூறி வந்துளேன். ஆகையால் நல்வாழ்வுபெற்றவனே, இப்பொழுது அரசர்வசிக்கும் இன்பவளங்கள்வாய்ந்த நகரத்தில் வசிப்பதற்குச் சம்மதிக்கமாட்டேன். அன்றியும், வலிமையும் அழகும் வாய்ந்த பெரிய தோள்களையுடைய வீரனே, யாழின் இசைபோன்ற இனிய மொழிகளைப் பேசுகின்ற சீதையோடு கூடியே அல்லாமல், நான் அங்கு வந்து வசிப்பதால் அடையக்கூடிய இன்பம் யாவதோ? இதனை நீ சிந்தித்துப் பார்க்கவில்லை போலும்.]

என்றனன். ஆதலின், சுக்கிரீவனது அழைப்பிற்கு உடன்பட்டால், தனது விரதமும் வாக்கும் பிழைப்பதன்றி இன்பமுமெய்தாமல், பழியும் சேருமென்று பின்னரும் இராகவன் உரைக்கின்றான்—

தேவிவேறரக்கன்வைத்தசேமத்துளிருப்பத்தான்ற
னாவிபோற் றுணைவ ரோடு மளவிடற் கரிய வின்ப
மேவினா னிராம னென்ற லையவிவ் வெய்ய மாற்ற
மூவகை யுலக முற்றுங் காலத்து முற்ற வற்றோ

[தன் தேவியாகிய சீதை, வேறாக, அரக்கனாகிய இராவணன் வைத்த காவலில் இருக்க, தான் தனது உயிர்போன்ற நண்பர்களுடன் அளவிடக்கூடாத இன்பத்தைஇராமன் விரும்பினான் என்றால், ஐயா, இந்தக்கொடிய சொல், மூன்று வகைப்பட்ட உலகங்கள் முடியுங் காலத்திலும் நீங்க வல்லதோ.]

என நெட்டுயிர்ப்பு வீங்குகின்றான். முன்னர்த் தன் தேவியின் அணிகலன்களைக் கண்டுகலங்கிய நெஞ்சத்தனாய்,

வாணெடுங் கண்ணியென் வரவு நோக்கயான்
தாணெடுங் கிரியொடுந் தடங்க டம்மொடும்
பூணொடும் புலம்பியிப் பொழுது போக்கினேன்
நாணொடுஞ் சிலைசுமந் துழல நாணலேன்

[வாள்போன்ற பெரிய கண்களையுடைய சீதை என்னுடையவரவை அங்கு எதிர்பார்த்துக்கொண்டிருக்க நான், அடி பெருத்த மலையோடும் குளங்களோடும் ஆபரணங்களோடும் இப்படிப் பொழுதுபோக்கிக்கொண்டு நாணோடு கூடியவில்லைச்சுமந்து திரிய நாணாமல் இருக்கின்றேனே]

என்று பழிமிகக் கூர்ந்தஇராமன், புலம்பி உழன்றதுமல்லாமல், இன்னுயிர் நண்பரோடு அளவிடற் கரிய இன்பம் மேவினானெனில் அப்பழி ஊழிக்குமப்பால் முற்றுதல் எங்ஙனமென அஞ்சுத லியற்கையேயாம். இவைகளே யன்றி, இராமன், தான் நகர்க்கண் நண்ணாமல் வனத்தகத்தே வைகுதற்கு வேறோர் காரணமும் வகுக்கின்றான். அதன் திறம் அறித்தற் கருமையேனும் உணர்தற்குரியது.

இல்லறந் துறந்தி லாதோ
ரியற்கையை யெதிர்ந்து போரின்
வில்லறந் துறந்து வாழ்வேற்
கின்னன மேன்மை யில்லாச்
சில்லறம் புரிந்து நின்ற
தீமைக டீரு மாறு
நல்லறந் தொடர்ந்த நோன்பி
னவையற நோற்ப லென்றான்

[இல்லறத்தின்தர்மத்தைக்கைவிடாதவர்களுடையதன்மைக்கு மாறாகி நடந்தும், போரில் வில் அறத்தைக் கைவிட்டும் வாழலாகின்ற வெனக்கு, இத்தகைய அற்பமான அறங்களைப் புரிந்ததால் ஏற்பட்ட தீமைகள் தீரும்படி, நல்ல அறத்தோடு நோன்பினால் அக்குற்றங்கள் நீங்கும் வரையில் தவம் செய்வேன், என்றான்]

கம்பர் நூலின்கண் பொருள்காணற் கருமையாயிருக்கின்ற சிற்சில செய்யுள்களில் இது வொன்று. புகலவந்த விடயங்களைப் பொதுப்படக் கூறியிருத்தலால் இவ்வருமை நேர்கின்றது. இராமன் எந்த இல்லறந் துறந்திலாதோர் எவ் இயற்கையை எங்ஙனம் எதிர்ந்து எப்போரில் வில்லறத்தினை எவ்வகை துறந்தனன்? இனி, சில்லறம் எதனைப் புரிந்த தீமைகள் இவன்பால் நின்றன?

இல்லறந் துறந்திலாதோர் இயற்கை 'பிறனில் விழையாமையாம்' என எண்ணும்படி, "அறனியலான் இல்வாழ்வான் என்பான் பிறன் இயலாள் பெண்மை நயவாதவன்" என்னுங் குறள் நிற்கின்றது. எனின், சுக்கிரீவனது நன்மனைவியைக் கைப்பற்றினான் வாலி என்ற அச்செய்தியை இனிஉண்மையென்று நம்பாமல் இராமன், பிறனில் விழைந்து இல்லறந் துறந்திலாதோர் இயற்கை யுடையவனாகிய வாலியை எதிர்த்துப் போரினில் மறைந்தெய்து வில்லறந் துறந்தனனாய்த் தன்னைப் பேசிக்கொள்கின்றான் என மதித்தல் கூடும். அல்லாக்கால், தன்வழி யொழுகற்பாலளாய இல்லாளின் வழியே தான் ஒழுகுதலாம் அப்பெண்வழிச் சேறலும் இல்லறத்தின் இயற்கைக் கெதிராதலின், மாயமானைப் பிடித்துத் தரச்சொன்ன அச்சீதைக்குத்தான் பெண்ணேவல் செய்தொழுகியதனை நினைத்து, இல்லறந் துறந்திலாதோர்தம் இயற்கைக்கு மாறாகத் தான் நடந்தமை பற்றித் தன்னையே இங்கு நிந்தித்துக் கொள்ளுதலும் ஆகக் கூடும். "அவ்வாறு இல்லறம் துறந்தவனும், பிறகு வாலியை மறைந்து கொன்று வில்லறம் துறந்தவனும், ஆகிய நான்...நவையற நோற்பல்" என இச்செய்யுளுக்குப் பொருள் காண லியலும். இன்னபடியின்றி, "இல்லறந் துறத்தல்" என்னுமிதற்கு "மனைவியைப் பறிகொடுத்தல்" என்றும், "போரின் வில்லறந் துறத்தல்" என்பதற்கு, "மனைவியைக் கவர்ந்தவனைப் போரினில் வென்று அவளை மீட்காதிருத்தல்" என்றும், எத்துணை வலிந்தும், பொருள்செய்ய இயலுமென நினைத்தற் காவதில்லை. மேலும், இல்லறமும் வில்லறமும் துறந்த தீமைகள் அன்றிச் சில்லறம் சில புரிந்த தீமைகளும் தன்பால் நின்றன என்றான் இராமன். இவையனைத்தையும் ஒருங்கே மனத்துட்கொண்டுமதிக்கப்புகுங்கால், "வாலியை வாளியின் வீட்டித் தலைமையோடு நின் தாரமும் உனக்கின்று தருவேன்" என்ன விரைந்தொரு வாக்குச் சுக்கிரீவனுக்கு வள்ளலாய் நின்று தந்து, சொன்ன சொல் தவறாமை என்ற அச்சிறிய அறத்தைக் காத்தலின்பொருட்டு, இல்லறந் துறந்திலாத வாலியைத்தன் வில்லறந்துறந்துகொன்றதனைய தீமைகள் தீருமாறே தான் நல்லறந் தொடர்ந்த சில நோன்பின் நவையற நோற்றல் வேண்டுமென்று செப்புகின்றானெனக் கொள்ளலே முறை. ஏனைய வெல்லாம் எவ்வாறாயினும், தான் செய்ததீமைகளும் உளவென்று இராமன் வெளிப்படையாய் இங்கு ஒவ்வுகின்றான் என்பதிலோர் ஐயமில்லை. சீதையைத்தான் இழப்பதற்குக் காரணமாய பழையவினைகள் இங்கு இராமனால் குறிக்கப்பட்டன என்று எண்ணற்குச் செய்யுளின் அமைப்பேனும் சொற்களின்பொருளேனும் இடந்தந்து நிற்கவில்லையே.

எனின், தான் வாலியைக் கொன்ற இது குற்றமே என்று இராமனே மனமும் வாயும் விட்டு வெளிப்படையாகவிளம்பிவிடுகின்றானே என்னும் கேள்வியும், அவன்செய்த அச்செய்கை குற்றத்தின் பாலதேயோ என்னும் ஐயமும், அவ்வாறாயினுந் தானே சொல்லிக்கொள்வானோவென்னும் வியப்புந் தோன்றலாம்.

இப்பொழுது நிகழ்வது இராம நாடகம். முழுமுதற்பொருளின் அலகிலாவிளையாட்டுக்களில் ஒன்றாக முடிந்த வாலிவதையைப் பற்றி இப்பொழுது இராமன் மானுடச்செயலாகப் பேசுகிறான். அன்ன நிலையில் அது வில்லறந்துறந்த காரியமாமேயன்றி வேறொன்று ஆவதற்கில்லை. முன்னரிங்கு விளக்கப் பெற்றிருப்பவைகளோடு, இராமன் இங்குத் தானே ஒவ்விக்கொள்வதையும் சேர்த்து முடிந்தது முடித்தலாகக் கருதுதல்வேண்டும். அவ்வாறாயின், இராமன் அதனைத் தானேசொல்லிக்கொள்வதினால் கடக்கரிய வியப் பொன்றும் எய்தவேண்டியதில்லை. மானுடத் தன்மையின் அடையாளங்களில் மிக்க முக்கியமானது குற்றம்புரியக்கூடியதாயிருத்தல்; புரிய நேர்ந்தாயின், அதனைச் செம்மை யென்றே சாதிக்கப்புகாமல், அதனைச்செப்பிப் பின் அதனான்விளைந்த தீமைகள் தீருமாறு நோற்பர் பெரியோர் எனத்தக்க மக்

கள். இராமன் இப்பொழுது அன்னது செய்யற்குத் துணிகின்றான்; அவ்வளவே. தான் குற்றம் செய்ததாகவும் அதன்பயன் தன்னைச் சார்ந்ததாகவும் இராமன் பாவனைகள் பேசுகின்ற இடம் இதுஒன்றுமேயன்று. முன்செய்த தீவினைகளினால் தான் கட்டுண்டிருப்பதாகப் பேசுவதன்றியும் தானே இப்பிறவியில் சில தீமைகள் செய்தனன் போல நடித்த இடங்களும் இந்நூலின்கண் காணப்படுகின்றன. பின்னர், இலங்கைக் களத்தில் பிரம்மாத்திரத்தால் வீழ்ந்து கிடக்கின்ற குரக்கினத்தலைவர்களையும் தன் தம்பி இலக்குவனையுங்கண்டு ஆற்றானாகிப் "புன்தொழில் புலையரசினை வெஃகியென் பூண்டேன்" என்னப்புலம்பிய நாள், இராமன் என நினைத்தான், என்செய்தான், யாது சொல்கின்றான், என்ன வியக்கவேண்டாவோ! இராமன் எவ்வரசினையும் வெஃகினானல்லன். "நீ நெடுமுடி புனைதற் கிணங்கவேண்டும்" என்று தயரதன் உரைத்தபோது, இராமன், காத லுற்றிலன் இகழ்ந்திலன், கடன் இதென்று நின்றனன். பிற்றைநாள், "அரசு உனக்கு இல்லை" யென்று சிற்றவை உரைத்தபோது, இராமனது திருமுகம் அன்றுஅலர்ந்த செந்தாமரையை வென்றது. இன்னவொருவன், "புன்தொழில் புலையரசினை வெஃகினேன்" என்பானாயின், இதற்கு எவ்வகை நாடி யுரைசெய்வோம். அதுதானுமன்றிச் சிறிது பின்னரும்,

மண்மேல் வைத்த காதலின் மாதா முதலோர்க்கும்
புண்மேல் வைத்த தீநிகர் துன்பம் புரிவித்தேன்
பெண்மேல் வைத்த காதலி னிப்பே றிகள்பெற்றேன்
எண்மேல் வைத்தேனென் புகழ்யான்றானெளியேனே

என்னப் புலம்பிய சொற்கள் வெஃகலோடு, பெண்வழிச் சேறலாம் பெரிய பெரிய தீமைகளும் இராமன் புரிந்து நின்றான்போல் நிகழ்கின்றன. கடவுள் என்பதுகிடக்க, வோர் மனிதன் என்ற பான்மையினும், மண்மேலும் பெண்மேலும் யாவதுங் காதல் பிழைபட வைத்திராத இவ்வள்ளல் பொய்யே குற்றந் தன்மேல் சுமத்திக்கொள்ளுஞ் சூழ்ச்சிய னவதைச் சோதிக்குங்கால், மானுடமுறையின்படியும் மன்னறத்தின்படியும் குற்றமேயன்றி வேறொன்றும் ஆவதற்கியலா வாலியின் வதையை வில்லறந்துறந்தவழக்கே யெனவிளம்பலுற்றது நம்மனோர் உணர்வினைக் கடந்தவொரு விந்தையாய் விளைதல் வேண்டா.

இன்னவாறு தான் கிட்கிந்தையி லெய்திவைகுதற்கியலாமையை இயம்பியபின், மேலினிச் சுக்கிரீவன் ஆற்றவேண்டியதை உரைப்பானாகி,

அரசியற் குரிய யாவு
மாற்றுழி யாற்றி யான்ற
திரைசெயற் குரிய சேனைக்
கடலொடுந் திங்க ளான்கின்
விரசுக வென்பா னின்னை
வேண்டினென் வீர வென்றான்
உரைசெயற் கெளிது மாகி
யரிதுமா மொழுக்கி னின்றான்

[உரைப்பதற் கெளியதும் உணர்வதற்கு அரியதுமாகிய வோர் ஒழுக்கத்தில் நின்றவனாகிய இராமன், சுக்கிரீவனை நோக்கி, "வீரனே, அரசுக்குஉரிய காரியங்களையெல்லாம் செய்யவேண்டிய முறைப்படி செய்து, நிறைந்த அலைகள் மோதுவதற்குரிய கடல்போன்ற உனது சேனையுடனே, நான்குமாதங் கழிந்தபின் என்னிடம் வந்து சேர்வாயாக. உன்னை நான் இங்ஙனம் வேண்டிக்கொள்கின்றேன்"— என்றான்.]

இராமன் செய்யுங் காரியங்களின் தன்மையெல்லாம், "உரைசெயற்கெளிதுமாகி அரிதுமாம் ஒழுக்கில் நின்றான்" என்னும் அவ் வீற்றடியி லடங்கியிருக்கின்றது. இராமன் இன்னது செய்தனன் அல்லது இன்னது சொல்லினன் என்றவளவே உரைத்திடல் எளிதாகுமன்றி, எற்றுக் கன்னது செய்தனன் அல்லது சொல்லினன் என்பனவற்றை உணர்ந்து உரைத்தலோ அரிதினுமரிது. கடவுளின் சித்தத்திற்குக் காரணங்காட்ட வல்லார் யாங்குளர்? ஏனைய நிகழ்ச்சிகளெல்லாங் கிடக்க, இமையோர்தம் இடுக்கண்களைத் தீர்த்தலின் பொருட்டுக் "கூனுஞ் சிறிய கோத்தாயுங் கொடுமையிழைப்பக் கோல்துறந்து கானுங் கடலுங் கடந்து" அக்காரியம் புரிதலன்றி வேறோர் வகையும் அறிந்திலனோ, மாபூதத்தின் வைப்பெங்கும் ஊனும் உயிரும் உணர்வும் போல் உள்ளும் புறத்தும் உளனாய அவ்வொருவன்? எனின், இடையிடை அவன் செய்கைபற்றி யெழுகின்ற சிறிய ஐயங்களெல்லாம் அவ்வொரு மூலமாகிய பேரையத்தினுள் கரைந்துவிடல் வேண்டும். இராகவன் இங்குத் தான் செய்த தீமைகள்தீர நவையறநோற்கப் புக்கதும் அன்னவைகளில் ஒன்றேயன்றி வேறன்று.

இன்னவாறு இராகவன் கூறுதலும் சுக்கிரீவன், அவனது குறிப்பை யறிந்து, மறித்தொரு மாற்றஞ் சொல்லாமல் வணக்கம்புரிந்து அளப்பரியதுன்பமுடன் அவ்விடம்விட் டகன்றனன். அதன்மேல்,

வாலிகா தலனு மாண்டு மலரடி வணங்கி னானை
நீலமா மேக மென்ன நெடியவ னருளி னோக்கிச்
சீலநீ யுடைமை யாத லிவன்சிறு தாதை யென்னா
மூலமே தந்த நுந்தை யாமென முறையி னிற்றி

[வாலியின் மகனாகிய அங்கதன் அப்பொழுது இராமபிரானது தாமரைமலர்போன்ற பாதங்களை வணங்க, நீலமேகம் போன்ற பெரியோனாகிய இராமன் அவனைக் கருணையுடன் பார்த்து, "நீ சீலமுடையவன் ஆகவேண்டுமானால், இச்சுக்கிரீவனை உன் சிற்றப்பன் என்று கருதாமல், உன்னைப் பெற்ற தந்தையே என்னக் கொண்டு, அவன் முறைப்படி நடப்பாயாக]

என்னமற்றினையகூறியேகவற்றொடரவென்றான்
பொன்னடிவணங்கிமற்றப்புகழுடைக்குரிசில்போ
பின்னர்மாருதியைநோக்கிப்பேரெழில்வீரநீயு [னான்
மன்னவனரசுக்கேற்றதாற்றுதியறிவினென்றான்

[என்று மற்றும் இத்தகைய வார்த்தைகளைச் சொல்லி, 'அச்சுக்கிரீவனைத்தொடர்ந்து நீயும்செல்க என்றான்.' புகழுடைய அங்கதனும் இராமனது பொன்போன்று அழகிய பாதங்களை வணங்கிவிட்டுப் போனான். பிறகு, அனுமனை நோக்கி, "மிக்க அழகுடைய வீரனே, நீயும், சுக்கிரீவனது அரசிற்குரிய காரியங்களை உன்னுடைய அறிவினால் செய்வாயாக என்றான்]

இராமனுட னிருந்து ஒரு நாள் பயின்றுளோரும் பின்னர் அவனைவிட்டுப் பிரிதற் காற்றார். "நின் பிரிவினுஞ் சுடுமோ அப்பெருங்காடு" என்று கூறிய சீதையின் சொற்கள் இராமபிரானை ஒருமுறையே நோக்கினோர்க்கும் ஒக்கும். எனின், இராமபிரானது திருமேனியில் மாத்திரமன்றி அவனது தத்துவ நிலையினும் ஈடுபட்ட மாருதி எங்ஙனம் ஆற்றுவான். முன்னே, கூடிப் பிரியமாட்டா அக் குகனே யென்ன,

பொய்த்தலி னுள்ளத் தன்பு
பொழிகின்ற புணர்ச்சி யானு
மித்தலை யிருந்து நாயே
னேயின வெனக்குத் தக்க

கைத்தொழில் செய்வே னென்று
கழலிணை வணங்குங் காலை
மெய்த்தலை நின்ற வீர
னிவ்வுரை விளம்பி விட்டான்.

[பொய்யற்றதன் உள்ளத்திலிருந்து அன்புபொழிகின்ற தன்மையனாகிய அனுமானும், "நாய்போன்ற நான் இவ்விடத்திருந்து, நீ ஏவினவைகளை என்னால் இயன்றவரையில் உனக்குக் கைங்கரியங்கள் செய்துகொண்டு இருப்பேன்" என்று இராமனது இரண்டுபாதங்களையும் வணங்கும்போது, மெய்ம்மையையே தனக்கு இருப்பிடமாகக் கொண்ட வீரனாகிய இராமன் இந்த வார்த்தைகளைக்கூறி விட்டான்.]

"விளம்பிவிட்டான்" என்ற சொற்கள், "சொல்லத்தகாதனவற்றையும் இராமன் சொல்லி விட்டான்" என்ன வியக்கின்ற குறிப்புட்கொண்டு நிற்கின்றன போலும். மெய்த்தலைநின்ற வீரன் குறித்த இக்குறிப்பும் பொய்யன்று. ஏனெனில்,

நிரம்பினா னொருவன் காத்த
நிறையர சிறுதி நின்ற
வரம்பிலா ததனை மற்றோர்
தலைமகன் வலிதிற் கொண்டால்
அரும்புவ நலனுந் தீங்கு
மாகலி னைய நின்போற்
பெரும்பொறை யறிவி னோரால்
நிலையினைப் பெறுவ தம்மா

[நற்குணங்கள்நிரம்பப்பெற்றஒருவன்காத்திருந்தவோர் நிறைந்தஇராச்சியத்தை அவனுக்குப் பின்நின்றவேறோர் தலைமகன், வரம்பில்லாமல் வலியக் கைப்பற்றிக்கொண்டால், அதனால், நன்மையுந்தீமையும் விளையுமாகலின், ஐய, உன்னைப்போன்றபெரிய பொறைஅறிவுமுதலியவை உடையவர்களால் அவ்வரசு நிலைபெறுதல் வேண்டும்.]

ஆன்றவற் குரிய தாய வரசினை நிறுவி யப்பால்
என்றெனக் குரிய தாய கருமமு மியற்றற் கொத்த
சான்றவர் நின்னி னில்லை யாகலாற் றருமந் தானே
போன்றநீ யானேவேண்ட வத்தலைபோ தி யென்றான்

[இப்பொழுது அரசசெல்வம் நிறையப்பெற்ற சுக்கிரீவனுக்கு உரித்தான அவ்வரசினை நிலைநிற்கும்படி செய்து, பிறகு, என்க்குச்செய்யவுள்ள காரியத்தையும்எற்றுக்கொண்டு செய்யத்தக்க பெரியோர் உன்போன்றவர் எவரும் இல்லை. ஆகையால், தருமமே வடிவெடுத்தாற்போன்ற நீ, நானே வேண்டுவதற்கு இணங்கிச் சுக்கிரீவனிடத்திற்குச் செல்வாயாக—என்றான்.]

எனின் இனியொரு சங்கையில்லை. வாலியோ எல்லாம் நிரம்பினவன்; அவன் காத்த அரசும் நிறையராய் நின்றது; வரம்பிலாது அதனைச் சுக்கிரீவன் வலிதிற் கொண்டான். மற்றென்; இக்காரியத்தின்செய்தியெல்லாம் இராமன் வாய்விட்டு விளம்பிவிட்டான். இராமனுடைய இவ் வெளிப்படைச் சொற்களின் சான்று இல்லாமலே, வாலியைவதைத்துச் சுக்கிரீவனரசுகொண்ட கருமம், வரம்புஇல்லாமல்வெளவிய தொன்றேஎன் றிதன்முன் காட்டியகாரணங்களால் விளங்கியிருத்தல் வேண்டும். இராமனது கருத்தும் அன்னதே யென்னக் கம்பர் இறுதியில் துணிந்து கூறுகின்றார். மற்று இராகவன் இதற்குஉடன்பட்டு உதவியாய் ஏன்நின்றான் என்றுகேட்கின்ற காலமோ கழிந்துவிட்டது. அவன்சித்தம்; அதுசாலும். உரைசெயற்கு எளிதுமாகி அரிதுமாம் ஒழுக்கின் நிற்பவனவன். இதற்குமுன், வலிதிற்கொண்ட அரசினில் நலனொடு தீமையும் அரும்புமெனவுணர்ந்து அன்னதனை நிலைபெறச் செய்வதற்கு அநுமனனைய சான்றோர்தம்உதவியின்இன்றியமையாமையின் அரசதந்திரங்கள் இராமனால் பேசப்படுவது பொருத்தமற்றதாகாது.

இன்னது கேட்ட மாருதி பின்னர் யாதும் புகலாமல் இராமனை வணங்கி யகன்றனன். இராகவனும் இலக்குவனும் வேறோர் தடங்குன்ற முற்றனர்.

ஆரிய னருளிற் போயவ்
வகன்மலை யகத்த னாய
சூரியன் மகனு மானத்
துணைவருங் கிளையுஞ் சுற்றத்
தாரையை வணங்கி யன்னாள்
தாயெனத் தந்தை முந்தைச்
சீரியன் சொல்லே யென்னச்
செவ்விதி னரசு செய்தான்.

[இராமபிரானது அருளினைப்பெற்றுச் சென்று,விசாலமான அந்தக் கிஷ்கிந்தைமலையின் உள்ளிடத்தைச்சேர்ந்தவனாகிய, சூரியன் புதல்வனான சுக்கிரீவனும், பெருமை பொருந்திய துணைவரும் சுற்றத்தாருஞ் சூழ்ந்திருக்க, தாரையை வணங்கி, அவளையே தனக்குத் தாயாகவும், சிறப்புடையஇராமன் முன்னே தனக்கு உரைத்த உறுதிமொழிகளையே தந்தையாகவுங் கொண்டு, செம்மையாக அரசுசெய்தான்.]

அளவிலா ஆற்றல் வாய்ந்த அங்கதனும் இராமனது ஆணைப்படி அவ்வரசசெல்வத்திற்கு இளவரசு இயற்றினான்.இராமனும்மதங்கமுனிவன் இருப்பிடமாகிய இருசியமுகபருவதத்தையெய்தி அங்கு இலக்குவனால் சமைக்கப்பெற்ற பர்னசாலையில், மாரிக்காலத்தின்செலவிற்குக் காத்தினி தமர்ந்திருந்தனன்.

அரசியற்படலம் முற்றிற்று.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

7-ம் பத்து, 2-ம் தசகம்.
(777-வது பக்கத் தொடர்ச்சி)
8-ம் பாசுரம்.

கொழுந்து வானவர்கட் கென்னும்
குன்றேந்திக் கோநிரை காத்தவ னென்னும்
அழுந்தொழு மாவி யனல வெவ்வுயிர்க்கு
மஞ்சன வண்ணனே யென்னும்
எழுந்துமேல் நோக்கி யிமைப்பில ளிருக்கு
மெங்ஙனே நோக்குகே னென்னும்
செழுந்தடம் புனல்சூழ் திருவரங் கத்தா
யென்செய் கேனென் திருமகட்கே.

பதக் குறிப்புக்கள்:—"ஆவி அனல வெவ்வுயிர்க்கும் - சோகமாகிய அனலினாலே தன் ஆவியானது வேகும்படி பெருமூச்சு விடாநிற்கும். இமைப்பிலள் இருக்கும் -கண்இமைக்காமலிருப்பாள்.கஜேந்திராழ்வான் கூப்பிட்டபோழ்து வந்தவனை எதிர்நோக்கிக் கண்கள் இமைக்காமல் ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொண்டிருக்கும்;என்செய்கேன் என் திருமகட்கே-

தாய், தன் பெண்ணை ஆசைப்பட வேண்டாமென்று சொல்லவேனும், பகவானை வரச்சொல்லவேனும் இயலாதவளாய்த் திகைக்கிறபடி.

பொழிப்புரை:—அயர்வறு அமரர்களுக் கதிபதியாயிருந்து உலகபாரத்தைத் தவிர்ப்பதற்காக வஸுதேவர் திருமகனாயவதரித்துக் கோபாலனாய்ப்பிறந்தருளி அதிவிருஷ்டியால் பீடிக்கப்பட்ட இடையர்களையும் பசுக்களையும் கோவர்த்தன கிரியைத் தூக்கி எடுத்து இரக்ஷித்தருளின உன்னுடைய நிரவதிகமான கிருபைக்குக்கூட விஷயமல்லேனோ வென்னும் - பின்னையும் நீ பார்த்தருளிருந்தவாறே யழா நிற்கும் - உன்னுடைய நீலமேகத் திருமேனியை எனக்குக் காட்டியருளி என்னுடைய தாபத்தை யெல்லாம் தீர்த்தருளா யென்றுசொல்லும்—நீவரும்படியைக்காணவேணுமென் றெழுந்திருந்து கண்கள்கொட்டாமல் ஆகாயத்தை உற்றுப்பார்த்துஇருக்கும். காணாமற்போகவே செந்நீர்த் திருவரங்கத்திலுள்ளவனேஎன்னும்; நானென்னசெய்வேனென்கிறா ளிவள் திருத்தாயார்.

9-ம் பாசுரம்.

என்திரு மகள்சேர் மார்பனே யென்னு
மென்னுடை யாவியே யென்னும்
நின்திரு வெயிற்றா லிடந்துநீ கொண்ட
நிலமகள் கேள்வனே யென்னும்
அன்றுரு வேழுந் தழுவிநீ கொண்ட
வாய்மக ளன்பனே யென்னும்
தென்திரு வரங்கங் கோயில் கொண்டவனே
தெளிகிலேன் முடிவிவ ளனக்கே.

“என்னை யாளாயுடையவளாய் உன்னோடு நித்திய வாஸம்பண்ணுகிற இலக்குமி பிராட்டியின் ஆநந்தாநுபவத்திற்கும், மஹா பிரளயத்தில் வெள்ளத்தில் அழுந்திக்கிடக்கும் பூமியை வராஹாவதாரமெடுத்து ஒரு கோட்டினால் தூக்கி உயர்த்தி மேல்படி பூமிப்பிராட்டியைமணந்து அவளுக்கும்ஆநந்தமளிக்கிறவனே; ஏழு விருஷபங்களையடர்த்து நப்பின்னைபிராட்டியைமணந்து அவள் ஆநந்தத்திற்கும்காரணபூதனே- இவர்களுடைய உகப்புக்கா, இவ்வளவு செய்த நீ என்னை உன் திருக்கண்களாலே பார்த்தேனும் அருளாயோவென்றசொல்லும் - எனக்காக வல்லவோ திருஅரங்கத்தில் பள்ளிகொண்ட தென்றுசொல்லா நிற்கும்.— தாயின் கருத்து யாதெனில், மற்றபிராட்டிமார்களுக்காக நீ செய்த முயற்சி ஒன்றும் இப்பிராட்டியின் உகப்புக்கு இவள் திறத்தில் செய்யவேண்டா-திருவடிகொண்டு குளிரநோக்கினால் போதும், இதுவும் செய்கிறாயில்லை. இவள் கதிதான் என்னாகுமோ? அடியேனுக்கு ஒன்றும் புலப்படவில்லையேயென்று நற்றாய் விண்ணப்பம் செய்கின்றாள்.

10-ம் பாசுரம்.

முடிவிவ ளனக்கொன் றறிகிலே னென்னு
மூவுல காளியே யென்னுங்
கடிகமழ் கொன்றைச் சடையனே யென்னும்
நான்முகக் கடவுளே யென்னும்
வடிவுடை வானோர் தலைவனே யென்னும்
வண்டிரு வரங்கனே யென்னும் [தனள்
அடியடையா தாள்போலிவ ளணுகி யடைந்
முகில் வண்ண னடியே.

இப்பிராட்டி ‘முடிவெனக்கு ஒன்று அறிகிலேன்’ அதாவது விரஹவியஸநத்தால் பீடிக்கப்படுகின்றதிலிருந்து நான் தப்பி உய்ய ஒரு உபாயத்தையும்காண்கிறேன் அல்லேன்:—ஆதலால் முடிவதேநலமென்று இப்பிராட்டியின் துணிவுபோலும். மூவுலகாளி- தேவேந்திரனுக்குள் அந்தராத்மாவாய் நின்று மூன்று லோகங்களையும் ஆளுகின்றவனே! பரிமளம் வீசும் கொன்றைப்பூவை ஜடையிலே தரிக்கும்சிவபிரானே, நான்முகக் கடவுளே! வடிவுடைய வானோர் தலைவனே—நித்திய சூரிகளின் தலைவனே, இவர்கள் எல்லாவருக்கும் நிர்வாஹகனே, வண்புகழ் நிறைந்த திருவரங்கத்தானே,என்றுசொல்லும்; அங்கு மஹத்தான தேவதைகளுக்கு உபகாரகனாயிருக்கிறபடியே இங்கு உலகத்தாருக்கு அருள்புரிய அரங்கத்தில் வந்து தங்கிக் கோவில்கொண்டிருக்கிறானென்று திருவுள்ளம். இவள் அடையாதாள்போல்இனிப்பெரியபெருமாள் திருவடியை அடைவாளென்று சொல்லவோ நினைக்கவோ வொரு நிமித்தமும் காணாதிருக்கையாகின்ற அவஸ்தையில் இருக்கும் இப்பிராட்டி, முகில்வண்ணன்- மேகம் எல்லாவருக்கும் வருஷிக்குமாப்போலே உலகத்தார் எல்லாருக்கும் தம் உதார சுபாவத்தாலே அருள் புரியும் நீலமேகசாமளனான எம்பெருமான்; அடியே-திருவடிகளை,அணுகி-கிட்டி,அடைந்தனள் - பிரிவாற்றாமையால் வந்த துக்கமெல்லாம் மாறும்படி தான் ஆசைப்பட்டபடியே திருவடிகளிலே கலவியுடையப்பெற்றாளென்று இப்பிராட்டியின் திருத்தாயார் சந்தோஷிக்கிறபடி.

11-ம் பாசுரம்.

முகில்வண்ண னடியை யடைந்தருள் சூடி
யுய்ந்தவன் மொய்புனற் பொருநல்
துகில்வண்ணத் தூநீர்சேர்ப்பபன்வண்பொழிற்
சூழ்வண் குருகூர்ச் சடகோபன்
முகில்வண்ண னடிமேற் சொன்னசொன் மாலை
யாயிரத் திப்பத்தும் வல்லார்
முகில்வண்ணன் வானத் திமையவர் சூழ
விருப்பர் பேரின்ப வெள்ளத்தே.

குறிப்புகள்:-பெரியபெருமாள் திருவடிகளையடைந்தவனுடைய இன்னருளைப்பெற்று அதினாலுய்ந்து தம் சுவரூபமேஅழிந்ததாகக் கருதி முன்நொந்தவர் திரும்பவும் தம்முடைய ஆத்மாவை அடையப்பெற்றுத்தாமுளரானாரென்று ஜீவிததெசையைத் திரும்பி ஆழ்வார் அடைந்ததாக இப்பாசுரம் கூறுகின்றது. மனச் சஞ்சலமெல்லாம் நீங்கி இவர் மனந்தெளிந்து திரும்பவும் பகவத் குணாநுபவத்திற்கு அர்ஹரானாரென்று இப்பாசுரத்தின் கருத்து. மொய்நற் பொருநல் துகில்வண்ணத் தூநீர் சேர்ப்பன் வண்பொழில் சூழ் வண் குருகூர் = மொய் - திரண்ட, புனல் - நன்னீரையுடைய, பொருநல் - தாம்பிரபரணி (ஆற்றின் புராதனப்பேர்) துகில்வண்ண-வெளுத்த துணி போல் சுவேதமான, தூநீர் - பரிசுத்த ஜலத்தை, சேர்ப்பன் - அடுத்துச்சமீபித்த, வண் - அழகான, பொழில் - பூக்காடுகள், சூழ்- சுற்றுப்புறத்திலமைந்த சுந்தரமான குருகூர்.இம்மஹான்சடகோபஆழ்வார் பகவானின் கலவையை யபேக்ஷித்து நெடும்போது சென்றும் அதுகிடைக்காமையால் மனக்கிலேசப்பட்டுக்கலங்கி நின்றவர் தற்பொழுது மனஸாநுபவம் அவனின்னருளால் திரும்பவும் கிட்டவே தம்மனம் சாந்தியடைந்து ஒருவாறு பரிபூர்ணமனோரதரானார். ஆகவே அங்குமிங்கும் தன்னைச் சுற்றிலும் தெளிந்த

நன்னீர் பாய்ந்து வளர்ந்த தோப்புக்களும் பூங்காக்களும் வனங்களும் அடர்ந்து ரமணியமாயிருப்பதைக் கண்டார். தாம்பரபரணி (பொருநல்)ஆற்றில் பரிசுத்தமான ஜலம்நிறைந்துதெளிந்துஊர்ந்துமெதுவாய்ப்பாய்வதையும் கண்ணுற்று ஆழ்வாரின் மனோநிலைமை முன்னிலும் அதிகமாய்க் கடவுள்வணக்கத்தில் தாழ்ந்து சாந்தியும் யோகநிலையும் அடைந்தது. இதைப்படிக்கவே,ராமாயணம்ஆதியிலியற்றிய வால்மீகி பகவான் ஸ்ரீராமபிரான் சரித்திரச் சுருக்கத்தை ஸ்ரீநாரத மஹாரிஷியினிடம் கேட்டு அந்தத் திவ்விய சரித்திரத்தையே மனனஞ்செய்து தம்சீடர்களுடன் தமஸா நதிக்கரைக்கு ஸ்நானத்திற்கேக அங்குஅந்நதி ரமணியமாயும் பூர்ணமாகவும் ஆழ்ந்தும் அடிதொட்டு நிஷ்களங்கமாய்ப் பரிசுத்தமாய் ஓடுவதைக்கண்டு "ரமணீயம் பிரஸன்னாம்பு ஸந்மனுஷ்ய மனோயதா" என்று பாடியிருப்பது ஞாபகத்துக்குவருகிறது.மேற்படி உவமையின்பொருள்:—"ஈசன் தன்ஆணையால் சகல பிராணிகளுக்கும் ஹிதத்தையே நாடுகின்றான்; நாமும் அப்படியே அதனை நாடுவோம்," என்று உட்கொண்டு பிறர் நன்மையே நாடும் உத்தமகுணமுள்ள மனிதர்களின் மனமானது, தெளிந்த ஞானத்தோடும், சஞ்சலமற்ற பக்தியுடனும், விஸ்வாஸத்துடனும், எள்ளளவேனும் கலக்கமின்றிச்சாந்தியைமேற்கொள்ளுமோ, அதுவேபோல், இந்நதியின் தீர்த்தமும் தூய்மை மிகுந்து கலக்கமின்றிப் பூர்ணமாய் ஆழ்ந்து மெல்லச் சஞ்சரித்துப் போகின்றது.

இனி இத்தசகம், பகவான், தன் பக்தன் படுகின்ற துயரின் நிமித்தம் மற்றொரு பக்தர் அவனை ஒருவாறு நிந்தித்துப் பேசினாலும் அவர் குற்றங்களையெல்லாம் சுமைகொள்வானென்று கற்பிக்கின்றது. முன்னைய தசகத்தில் இப்பிராட்டியே நிந்தாஸ்துதிமுதலானது செய்தாள். இத்தசகத்திலிவளின் திருத்தாயார் தன் பெண்ணுக்குப் பகவானின் உபேக்ஷையினால் மிக்க துயரங்கள் விளைந்ததாகக்கொண்டு கோபித்துப் பேசுகின்றாள். இவ்வளவே வேறுபாடு.

தருமன் மாண்பு

[780-வது பக்கத் தொடர்ச்சி]

இதுவரையில் எழுதியபின் வியாசத்தின் ஏடுகளை ஒருதரம் புரட்டிப்பார்த்தேன். இக்கட்டுரையின்முற்பகுதியில் கண்ணபிரான் தருமனுக்குப் புறவந்தர்யாமியாயமைந்தான் என்றுஎழுதியிருப்பது கண்ணில் பட்டது.'புறவந்தர்யாமி' என்பது என்னவார்த்தை? அந்தச்சொல் அவ்வளவு நன்றாக இல்லையே என்று தோன்றியதும் ஒருவிஷயம் நினைவுக்கு வந்தது.எனக்குக் கலாசாலையில் ஆங்கிலத்தில் ஜேன் ஆஸ்ட்டின் **(Jane Austin)** என்பார் எழுதிய'எம்மா' **(Emma)** என்னும் நவீனம் துணைப்பாடமாக வைக்கப்பட்டிருந்தது. அதற்கு நான்முகம் எழுதிய லூகாஸ் **(E. V. Lucas)** என்பவர், கதாபாத்திரங்களின் பண்புகளை ஆராய்கையில் கதாநாயகியாகிய எம்மாவுக்கு, (அவளைக் கடைசியில் மணந்துகொள்கின்ற) நைட்லி **(Kightley)** என்பவன் 'புறவகச் சான்று' **(External conscience)** போல்வான் என்பார். புற வகச் சான்று என்பதும் எவ்வளவு முரணாகத் தோற்றுகிறது? மேலும் அவர் அத்தொடரை, வேறொருவரிடம் பெற்றாரெனத் தெரிகின்றது.ஆதலின் நான் இங்குப் 'புறவந்தர்யாமி' என்று கூறியது வீணாக உற்பத்திசெய்த சொல்லல்ல. நிற்க,மேற்கண்ட கருத்தொற்றுமை பின்னும் சில பிரச்சினைகளைக் கிளப்புகிறது. அந்நவீனத்தில்,'எம்மா' என்பவள் சாமானியமான இளம்பெண்ணாக இருப்பதால், தனது சிறிய தப்பிதங்களை, (உதாரணமாக, ஒரு கிழவியிடம் அவளுக்குச் சிறிது கோபம் வரும்படி மொழிதல், அறியாத் தனமாய்ச் சிற்சிலசமயத்தில் உரையாடுதல் முதலியவற்றை) 'நைட்லியி'டம் சொல்லாமல் அவளாலிருக்க இயலவில்லையாகலின்,'நைட்லி'யும்அவளது சிறியவழுக்களைஅவளுக்கு எடுத்துக் காட்டுகின்றமையின், 'நைட்லி' அவளுக்குப் புறஅகச்சான்று எனக் கூறுகிறார் லூகாஸ்.† தருமனும் அப்படியொரு புறவந்தர்யாமியை உடையானெனின், அவன் தனித்தியங்கவல்ல குண வன்மை யில்லாதவன்என்றுஅன்றோ கருதவேண்டும்? ஆயினும் ஒன்று; தருமனது ஆன்மாவைச் சஞ்சலம்செய்த விஷயங்களெல்லாம் மிகப் பெரிய பிரசனைகளே. ஆதலின் அவன் தனது மனச்சஞ்சலத்தைத் தீர்க்கக் கண்ணபிரானது உதவியை நாடினானெனின், அது அவனுக்கு இழுக்கன்று. அச்சத்தைப்பற்றி நான் அத்துணையும் கூறியபின், அவன் அவ்வாறு செய்தது இழுக்கென்பதற்குச் சிறிதும் உடன்படேன். ஆயினும் தருமனது குணத்தில் இயற்கையாகவே வன்மையிலும் மென்மையே தூக்கி நிற்கிறதென்பது ஒரு நுட்பமான உண்மை. தன்னைச் சேர்ந்தவர் எல்லோரையும் கொன்றுகுவித்தரசாள்வதை விட

கரவுறையும் மனத்தாதை முனிக்குரைத்த
மொழிப்படியே கானம் தோறும்
இரவுபகல் பலமூல சாகநுகர்ந்
துயிர்வாழ்தல் இனிது நன்றே.

என்று கூறியதில், திருதராட்டிரனது மனக்கரவை அறிந்தும் அதைக் கண்டிப்பதற்கியலாத மனமென்மையைப்பற்றி என்ன கூறுவது? இப்படிக் கூறியபடியே, சமரசம் விரும்பிச்சென்றால் அவனது அறம் பிழைபட்டதாகுமன்றோ? கிளைஞரைக்கொல்வதற்கு மனவலிமை இல்லாமல் கடமையைக் கைவிட்டோடுதல் அறமாகுமா? அவ் வறஉணர்ச்சியைச் செல்வனே நிலைநிறுத்தக் கண்ணபிரானது சொற்களன்றோ உதவின? அச்சமுள் ளடக்கியே அறத்தினைச்செய்ய வேண்டும். அச்சமுள்ளடக்கி ஒருஅறச்செயலைக் கைவிடுவது சரியோ? அல்லவாம். இதனைச் சிந்திக்கவும்.

இறுதியாக ஒன்று கூறற்குண்டு. தருமனது உள்ளம் மிக்க அபாரமான அறவெழிலைக் கொண்டதேனும், அவனது மனம் உண்மையில் ஒரு குழவியின் உள்ளத்தை ஒத்திருக்கிறது. இவ்வுரை அவனுக்குப் பெருமையேயன்றி இழுக்கன்று. ஏனெனின் பெரிய ஆன்மாக்களெல்லாம் இவ்வாறு குழவியின் உள்ளப்பாங்கின் தூய்மையும் எளிமையுமே பண்பாக உடையன. 'தவறு செய்வது மனித இயல்பு; அத் தவறை மன்னிப்பது கடவுட்டன்மை' என்பது பைபில் வாக்கு. இப்பழமொழியை ஒட்டி ருஷிய மகான் டால்ஸ்

† 'இது சரியா தவறு' என்று தன் மனச்சான்றுடன் பேசி முடிவுகட்டவேண்டிய விஷயங்களை, நைட்லியுடன் பேசித் தீர்த்துக்கொள்கின்றாள். ஆதலின் எம்மாவின் அகச்சான்று நைட்லியே என்பது அறிஞர் கூற்று. அதாவது, பின்னும் விரிப்போமெனின், "எம்மாவுக்குச் சுயமாக ஆராய்ந்துகொள்ளவல்ல இயல்பே கிடையாது என்பதே. ஆனால் தருமன் தானே மிகஆராய்ந்து, உதவிக்காகக் கண்ணனை அழைக்கின்றான். அப்படியும், கண்ணன் கூறுவதுதனது அகச்சான்றுடன் ஒன்றினால்தான் தருமனும் மனமிசைவன். ஆதலின்,இவ்வொப்புமை சிறிதளவு தூரமே செல்லும். இருப்பினும், இவ்வாறு ஷேக்ஸ்பியரின் சிருட்டியாற்றலில் ஒரு கூறுடையவர் என்று புகழப்பட்ட ஜேன் ஆஸ்ட்டினது திரு, வேதவியாத பகவானது சிருட்டியாற்றலின் ஒரு கூறு என்பதையும் நாம் இங்குக் கருதிச் செல்வோம்.

டாய் ஒரு சிறுகதை எழுதியிருக்கிறார். அதில் 'சமாதானமாக ஒத்துப்போதல் குழந்தைகளுக்கு இயல்பென்றும், இரத்தவெறிகொண்ட மனிதன் அந்தக் குழந்தையின் மனப்பான்மையைக் கொள்ளுமளவில்தான் அவனுக்கு விடுதலை யென்றும்' கூறுகிறார்.*

தருமனது மனம் சமரசமே பெரிதும் விரும்புந்தகைத்தென்பதும் அச் சமரசத்திற்காகத் தன் கடமையையும் கைவிட்டோட அவன் நினைத்தானென்பதும் நாம் நன்கு அறிந்ததே. தருமனது அகத்தூய்மையைப்பற்றி மிகுதியும் நாம் கூற வேண்டுவதில்லை. ஆனால் அவனது உள்ளத்தின் கபடமற்ற நம்பிக்கை குழந்தைகளுக்கே இயற்கையாகும். போரில் தன்னைச் சார்ந்தோர்பலர் தன் கண்முன்னே மடிவதைக் கண்டும், அவன் கண்ணபிரானிடத்துச் சிறிதேனும் வெறுப்பாவது அவநம்பிக்கையாவது கொள்வதில்லை. கண்ணன் இருக்கையில் அபிமன்யு பட்டானெனினும் அவனுக்குக் கண்ணனிட மிருந்த மதிப்பு எள்ளளவேனும் குறையவில்லை. அன்றிரவு, சிந்துவக்கரசனைப் பார்த்தன் தலை தள்ளுதல் இயலுமோ என்று தருமன் கண்ணனைக் கேட்க, 'நின் கனிட்டம் உண்மையில் நாளைச் சயிந்தவனை மகுடம் கொள்ளும்' என்று கூறிய போதும் தருமனுக்குச் சிறிதேனும் அகச்சஞ்சலம் இல்லை. வெற்றி கிடைக்குமென்னும் அபாரமான நம்பிக்கையுடன் கடோற்கசனைத் தூதுவிட்டது மல்லாமல், சுயோதனன் இரவெல்லாம் துயில் கொள்ளாமல், காலையில் போர் தொடங்கும்வரையிலும், போருக்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்யவும்,

காலை யாதபனை தருமன் மாமதலை
கைதொழுது
சாலை யார்தழல் வேள்வி யந்தணர்.

* அக்கதை வருமாறு. உற்சவ நாளன்று இரு குழந்தைகள் புத்தம்புதிதான உடைகளுடுத்துத் தெருவில் விளையாடிக்கொண்டிருந்தன. முதல்நாள் மழைபெய்திருந்ததால் எங்கும் சேறாக இருந்தது. அப்போது சிறியபெண் தனது பாவாடையைத் தூக்கிக்கொண்டு அர்நீர்த் தேக்கத்தில் குதித்தது. குதிக்கவே அத்தண்ணீர் பெரியசிறுமியின் பாவாடையை நனைத்தது. அதைப் பார்த்துக்கொண்டிருந்த பெரிய சிறுமியின் தாயார் ஓடோடியும்வந்து சிறிய குழந்தையைச்சாலப்புடைத்தாள். இதைக்கண்ட அந்தச்சிறுமியின் தாயார் பரிந்துவந்தாள். ஊர் கூடிற்று. இரண்டாகப் பிரிந்து சண்டைசெய்ய முயன்றார்கள். அப்போது ஒரு கிழவி 'பிள்ளைகளே அதோபாருங்கள்' என்று அவர்களைக் கூப்பிட்டுக் காட்டினாள்: அதற்குள் அச்சிறுமிகள் தங்கள் விரோதத்தைமறந்து அத்தண்ணீரை அத்தேக்கத்தினின்றும் வெளியேற்றும் முயற்சியில் ஒன்றுபட்டிருந்தனர். இதைப் பார்த்தவர் வெட்கினர்.

என்று சாவதானமாகவே இருந்த இருப்பைப்பற்றி என்ன நினைப்பது? அருச்சுனனாவது சிலவேளை,

ஆடகனைப் புதல்வனைக்கொண் டழிப்பித்தாய்
இலங்கைநகர்க் கரசை யன்று
வீடணனைப் பகையாக்கிக் கிளையுடனே
வீழ்வித்தாய் வேலை சூழ்ந்த
நாடறியப் புகுந்தெமக்கு நாயகமாம்
கன்னனையும் நரன்கை யாலே
ஈடழியப் பொருவித்தாய் இமையோர்கள்
வல்லவிர கியார்வல் லாரே.

என்று கூறுகின்றான். ஆனால் தருமன் ஒருபோதும் அவ்வாறு சொல்வதில்லை. அபிமன் பட்டபோது, அன்னையின் அன்பின்மையறியாதழூம்குழவிபோல்,

வானிருக்கின் முடிவான மரகதமா
மலையிருக்க வாழ்வா னெண்ணி
யானிருக்க இளஞ்சிங்கம் இறப்பதே
என்னே என்னே.

என்றழுகிறான். எல்லே, பாவம்! அவ் வானிருக்கின் முடிவான மரகதமாமலை, வானிருக்கின் முடிவான தன்மையினால்,

உற்றாரைச் செய்வேனும் யானே யென்னும்
உற்றாரை அழிப்பேனும் யானே யென்னும்
("கடல் ஞாலம்"—திருவாய் மொழி.)

கொள்கையுடையா னென்பதைத் தருமன் கருதினானில்லை. இன்னவாறு தருமனது அகத்தின் குழவித்தூய்மையையும், ஒப்புறவொழுகலையும், அளப்பரிய நம்பிக்கையையும் காட்டியவாறு. ஆயினும் இத்தகைய எளிமையுடையோனெனினும் அவனது அறஆற்றலால் பாரதத்தில் அவனது சொல்லே எதற்கும் முடிவான வார்த்தையாகும். துரியோதனனது அத்துணைச் சேனைப் பலத்தையும் அவற்றை நடத்தும் அவனது திறனையும் தருமன் தன் தூய்மையினாலும் எளிமையினாலுமே வெற்றிகொண்டது அதிட்டமே.

பெரியதுயரங்களும் மற்றும் வந்ததெனினும், வீடுமனைப் போல்

உழுதவாளி யுருவ உங்கள் முன்னர் வீழ்ந்தேன்
பழுதொன்றிலை யிதுவென் பவத்தால் பிறந்த
[தென்றான்.

என்பதில்உள்ள தோல்வியும் துயரமுமே வாழ்க்கையின் அந்தத்தைச் சூழாமல், தனித்திலங்கும் விண்மீனைப்போல், வேறொன்றும் வாய்க்காவிடினும், அறவெற்றியுடன் நின்றொளிர்கின்றான் தருமராசன்.

முற்றிற்று.

அண்டங்கள்

[783-வது பக்கத் தொடர்ச்சி]

வெகுசிறியஜீவன்களின் தன்மையைஆராயநமக்குப் பூதக்கண்ணாடி (Microscope) பேர் உதவியாயிருக்கிறது. பொருள்கள் அழுகிநாசமடைவதில் உண்டாகின்ற ப்பாக்டீரியா (Bacteria, one of the micro-organisms found in decomposing infusions of organic bodies) என்கின்ற சிறிய கிருமிகள் பூதக்கண்ணாடியினால் அன்றிப் புலப்படா. இவை எத்தன்மையன என்று ஆராயின், ஒருவினாடியில் நூற்றுக்கணக்கான சந்ததியை உற்பத்திசெய்துவிட்டுச் சிலவினாடிக்கெல்லா மாண்டுவிடுவதாக இயற்கைத்தத்துவ ஆராய்ச்சி தெரியப்படுத்துகிறது. இவை வசிக்கின்றகாலத்தைக் கணக்கெடுப்போமாயின் ஒரு வினாடியில் அவை இளமைப்பருவம் அடைந்து, மணந்து, பின் மூப்படைந்து மரணமடைகின்றன. அஃது அன்றியும் அவை உயிருடனிருக்குங்காலத்தில் ஓடிச் செய்கின்ற வேலைகள் என்ன, உணவு சேகரிப்பதென்ன; இவைகளையெல்லாம் நமது காலஅளவைக் காட்டுகின்ற வெகு அருமையான கடியாரத்தைக் கொண்டாவது கணிக்கக்கூடுமோ. இவை நம்மோடு இருக்கின்றன. ஆயினு மிவைகளைப்பற்றியும், இவற்றின் உலகத்தைப்பற்றியும்நாம் அறிந்திருப்பதுஇதர அண்டங்களிலுள்ள ஜீவர்களைப்பற்றி அறிந்திருப்பதின் அளவே.

இன்னும் பூதக்கண்ணாடியின் சக்திக்குமேற்பட்ட பொருள்களைஆராயப் பரமாணுத்தோற்றஆராய்ச்சிக் கருவிகள் (Spectroscopes) உதவுகின்றன. அவற்றின் உதவியினால், "வேதியன் தொகையொடு மாலவன் மிகுதியுந் தோற்றமுஞ் சிறப்பு மீற்றொரு புணரிய" தன்மையை, நாம் சில ஆண்டுகளுக்குப் பின்னர்க் கண்டு களிப்போ மென்பது திண்ணம்.

தற்கால விஞ்ஞான சாஸ்திரமுறைப்படி ஆராயப் புகுங்காலையில் சூக்கும அணு ஒவ்வொன்றும் சூரிய மண்டலம் போல் விளங்குகின்றது. அதாவது ஒவ்வொரு சூக்கும அணுவும் (Atom), இடையிலே ஆண் தன்மை பொருந்திய கனத்த ஓட்டமற்ற ஒரு காரண அணுவும், (Proton) பெண்தன்மைபெற்று இலேசானதும் வெகு வேகமாக இடைவிடாது சுழன்று வருகின்ற பாமாணுக்கள் (Electrons) பலவுமாய் இருக்கின்றதெனப் போர் (Bohr) என்னும் தத்துவ சாஸ்திரி நிரூபித்தார். (The atom consists of heavy Positively charged central nucleus with groups of very light electrons moving round it with a velocity which depends on the state of the atom) ஆகையால் நம்முடைய கண்ணுக்கு ஜீவனற்றபொருள்களாய் விளங்கும் கல், மண், உலோகங்கள், இன்னும் ஏனைய பொருள்கள் ஒவ்வொன்றும் ஆராயுங்காலையில் ஒன்றின்மேல் ஒன்ருக அடுக்கிய பல கோடி சூரிய மண்டலங்களாகவே விளங்குகின்றன. இந்தச் சூக்கும அணுவின் ஆராய்ச்சி கடைசி முடிவு பெறவில்லை. ஆகையால் நாம் இந்தச் சிறிய அண்ட ஆராய்ச்சியில் செல்லச் செல்ல இது உருவில் சிறியதாக இருக்கிறதே யன்றிக் குணத்தில் நாம் பெரிய அண்டமென்று எடுத்தவைகளுக்கு யாதேனும் குன்றவில்லை. மேலே போகப் போக அண்டங்களில் மிகப் பெரியவை எல்லாம் நமது கண்ணுக்கு மிகச் சிறியனவாக விளங்குகிறதுஎன்ருேம்; அதாவது நமக்கு அமாவாசை இரவில் வானத்தில் ஒரு மிகச் சிறிய நீலப் புள்ளி போல் விளங்கும் நட்சத்திரம் பெரிய அண்டமென்றும், அது நமக்குப் பல்லாயிர வெளிச்ச வருஷங்களுக்கு அப்பால் இருக்கின்றதென்றும் கண்டோம். அதனின்று மேலே போகப்போகப் பின்னரும் ஆராய்ச்சிக்கு இடம்கொடுத்துச் செல்கின்றது. அதுபோலவே, கீழே போகப்போக முடிவுங் காணப்படவில்லை. (Refer to Tennyson. All experience is an arch whereto gleams that untravelled world whose margin fades for ever and for ever into light). இதனுலோ தாயுமானவர்

"அண்டமுமாய்ப் பிண்டமுமாய் அளவிலாத
ஆருயிருக்கோ ருயிராய் அமர்ந்தா யானல்
கண்டவரார் கேட்டவரார் உன்னுனுன்னைக்
காண்பதல்லால் என்னறிவாற் காணப்போமோ"

என்ருர்.

அரியும் அயனும் அடிமுடி காணுததற்கு இதுவே பிரத்தியட்சமான சான்ரும். ஆகையால் வெளியில் ஊடுருவிச்சென்று இவ்வெளியின் ஆதி அந்தங்களைக் காண்பதற்குச் செய்யும் செய்கை முடிவற்றதாகும். ஆதியின் ஆரம்பந்தான் அந்தத்தின் முடிவென்று நாம் ஒருவாறு கூறலாம். எப்படிக் கணித சாத்திரத்தில் இன்பினிடி (Infinity) என்று மிகப் பெரிதையும், இன்பினிடெசிமல் (Infinitesimal) என்று மிகச் சிறியதையும் சொல்லி இரண்டையும் கணித அளவுக்கு அதீதமாகக் கொள்கின்ருேமோ அவ்வாறே இதுவும் முடியும்.

இவ்வுலகத்தை முதலாகவும் நடு அண்டமாகவும் கொண்டு அடிமுடி தேடினேம். அவையாவும் எங்கிருக்கின்றன என்று ஆராயப்புகின், நமது தலையாகிய அண்டத்தில், மனம் என்னும் ஒரு சூக்குமப்பொருளிலே நிலைத்திருப்பதென்பது மனேசாஸ்திரவாதிகளின் முடிவாகும்.

இதையே தாயுமானவர்:—

"பாராதி அண்டங்கள் அத்தனையும் வைக்கின்ற
பரவெளியின் உண்மை காட்டி (அதை)
பற்றுமன வெளி காட்டி"

என்ருர். அம் மனவெளியில் தோய்தலாலே பிறவித் துன்பம்விளைகின்றது. அதில்தோயாது சாட்சிபூதமாநிற்பின் துன்பக் கடலினின்று கரையேறுவோம். அங்கிருந்து இவ்வேடிக்கைகளைக் கண்டு களித்துக்கொண்டிருப்பதே நிஷ்டை. சமுத்திரக் கரையில் நின்றவனுக்குச் சமுத்திரம் இன்பம்கொடுக்கும். அதில் வீழ்ந்தோனே அலைமோதி மூழ்கி நாசமடைகிருன். அதுபோலவே இத்துன்பக்கரையில் துன்பமேயில்லை, இன்பமே. இதைத் தாயுமானவர் பற்பலவிதங்களில் பற்பல பதிகங்களில் காட்டுகின்ருர். இவைகளை அறியவேண்டுமானல் இவை யாவையும் ஆட்டுவித்து இவை யாவைக்கும் அதீதமாக நிற்கும், தத்துவராயர் கண்ட பெருமாளைப் பிடிக்கவேண்டும்.

"காலதிசை தேசமெல்லாங் கடந்துநின்ற பெருமாள்
கல்விக்கடல் வீழாமே காத்தருளும் பெருமாள்
ஞாலமுயிர் பரமென்ன நடித்தருளும் பெருமாள்
ஞானவினேதப் பெருமாள் நம்பெருமாள்.
அந்தரமே போகாமே யாண்டருளும் பெருமாள்
அப்போதைக் கப்போது மாருத பெருமாள்
எந்தரமு மவந்தாள விசைந்தருளும் பெருமாள
இப்படியென் றியம்பரிய வின்பவெள்ளப் பெருமாள்"
—பாடுதுறை

ஆகும். இத்தன்மைகளை அறிஞர் ஆராய்ந்து பின்னர் வெளியிடுவாராக.

முற்றிற்று.

வர்த்தமானம்

கேவலம் உண்பதும் உறங்குவதுமே வாழ்க்கையாக மாட்டாது. உயர்ந்த நோக்கம், சிறந்த செயல்கள், கௌரவ புத்தி இவற்றைக் கடைப்பிடிப்பதே நல் வாழ்க்கையின் லக்ஷணம் என்று ஐதராபாத் உஸ்மானியா சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழாவில் வைஸ் சான்ஸலர் டாக்டர் மெக்கன்சி கூறுகிருர்.

தெய்வப் பிரார்த்தனையால் நோயாளிகளுக்கு நோய்தீர்க்கும் வழக்கம் இங்கிலாந்தில் அதிகப்பட்டு வருகிறது. இதற்காக ஒரு சங்கமே அங்கு ஏற்பட்டிருக்கிறது. இங்கிலாந்தில் பிரைட்டனில் செயின்ட் ஸ்டீபன்ஸ் கோயில் பாதிரியாரான ரெவரண்டு ஜான் மெயிலார்டு என்பவர் எத்தகைய நோய்களையும் நீக்கிவிடுகிருராம். எனவே அவரிடம் ஏராளமான நோயாளிகள் போய்க் குணம் பெற்று வருகிருர்களாம்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
ச்யாவனப்ராசா பிருங்காமலகதைலம் கோரோஜனை மாத்திரை
நஞ்சன்கூடு பல்பொடி
சாதாரணம்-பாக்கேட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) மெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
ச்யாவனப்ராச. சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
மூலிகைசேர்ந்துசிற்றுமணக்கு எண்ணெ காஸ்ட்ராலகஸ்
ஜவரேக்
[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

1934-ம் வருஷத்திய வால்யூம் 7. அட்டவணை.

(ஜூலை முதல்—டிஸம்பர் வரையில்)

தலையங்கம்.

இதழ்.			பக்கம்.
26	கல்சரை யடையும் வகை	3	... 401
27	,,	4	... 417
28	,,	5	... 433
29	,,	6	... 449
30	,,	7	... 465
31	,,	8	... 481
32	எத்தைக்கண்டு இச்சைகொள்வோம்	1	... 497
33	,,	2	... 513
34	,,	3	... 529
35	,,	4	... 545
36	,,	5	... 561
37	தாய்மொழியிற் றழைத்தவுள்ளம்.		... 577
38	எத்தைக்கண்டு இச்சைகொள்வோம்	6	... 593
39	,,	7	... 609
40	,,	8	... 625
41	,,	9	... 641
42	,,	10	... 657
43	,,	11	... 673
44	,,	12	... 689
45	யார் நாண்?	1	... 705
46	,,	2	... 721
47	இருவருக் கில்லை யிடம்	1	... 737
48	,,	2	... 753
49	இருவரே எண்ம ராவார்.		... 769
50	கலாநிலயம்—ஏழாவதாண்டின் நிறைவு		... 785

கம்பராமாயணம்—கிஷ்கிந்தாகாண்டம்.

7. வாலிவதைப் படலம்

26 என்றன் கருத்திது வென்று ஸ்ரீராமன் ... 411
27 வாலியின் வரத்திற் கஞ்சி
எதிர்ந்திடா தெய்தான் கொல்லோ ... 419
28 மயங்காமரபுடைத் தன்பியல்தோற்றம் ... 443
29 ஊதித் தணிக்கும் நாடகத் திறமை. ... 460
30 கருத்தின்பெருமை காரணங்குறைக்கும் ... 478
31 நம்பியின் சொற்கள் நகுதக் கனவே. ... 487
32 வேற்றுமை யறியாக் கூற்றமு முளதோ ... 504
33 சோரியின் றொய்ய நீரின் சோதனை. ... 517
34 அறிவது மறியாக் கலையின் திறமை. ... 537
35 நின்னையேகெடுக்க நிகழ்த்தினையிதுவே. ... 553
36 தானே தனக்கிணி யாகிய வருமை. ... 565
37 விலங்கே யென்னில் விபரித மாமே. ... 581
38 வானர மேனீ மானுட னவாய். ... 595
39 தோல்வியே துணிந்தது கம்பர்தம்
கலைத்திறம். ... 611
40 வாழி வாழி வாலி வாழி. ... 630
41 பகழியால்மற்றவர்பெறுவரோபயன்களே. 645
42 ஆட்செய் யருமையு மாட்கொள்
ளுரிமையும். ... 661
43 கடவுளே யல்லா லிடர்கடப் பானே. ... 677
44 வணங்காத்தம்பியும்வணங்கியதனயனும். 693

8. அரசியற்படலம்

45 சோகத்தாற் சொன்ன ளச்சொல். ... 709
46 கொன்று லன்றே சான்றென நிற்கும். ... 724
47 கையாற் சூட்டக் காரண முளது. ... 741
48 குருவினும்விஞ்சிக்கொற்றங்கொண்டிலன். 756
49 இருக்க வென்றே வேண்டின ரிருவர். ... 771
50 வியப்புறுமொழிகளைவிளம்பினனிராமன். 790

தமிழ்ப்பாடம்.

நைடதம்—நளன் தூதுப்படலம்

இதழ் பக்கம்
26 அன்னமுரைசெய்த, பூகமடல்கீறி,
முடங்கலின். ... 403
27 கொய்யுளை வயப்புரவி, விரிகதி, தேர்
நடவு, பொற்றடந். மெய்+யக
ரம்=இகரந்தோன்றல். ... 425
28 மாயிரு, மண்டமர், பாந்தண்மேற்.
ய் ர் ழ்+வல்லினமெய். ... 435
29 கழைசுளி, போர்த்தொழில், அரத்த
முண், சேற்றிதழ். ய், ர், ழ்+மெல்
லினமெய். ... 451
30 இவனழற், உன்னுழை, உண்ணெகிழ்ந்,
குறிப்பறிந். ய், ர், ழ்+இடையின
மெய். கீழ், தமிழ், சிறப்பு விதிகள். ... 467
31 ஒளிமுக, ஐந்தரு, ஆங்கது, வெயில் விரி. 483
32 திருத்தகு, குருமணி, என்னும் விள்—
பயனுவமை, மயக்க வுவமை—மகர
மெய்+மெல்லின மெய். ... 499
33 முற்றிழை, எப்பொரு, வழங்கிய, என்
னவேந்.மகரமெய்+இடையினமெய். 517
34 உருகுதங், மனங்கவர், கண்ணகன்—
வீறுகோளணி, சிலேடையணி. மகர
மெய்+வல்லினமெய். ... 531
35 மலர்பயில், காமுறு, செய்யகண், தெரி
வையென்—தகுதியணி, உருவெளித்
தோற்றம். ... 547
36 விழைவெனும், விளங்கிழை, உருவெளி,
பொன்னடிப், மண்டமர்–மயக்கவணி,
ஓராதுரைத்தலணி. ... 563
37 ஒருத்தியா, மலர்ந்தசெங், கானம, எய்
திய, இருவிசும், எம்மிறை. ... 579
38 மண்ணினில், தாதொடு, என்னுளத்,
பாசிழை, வடிவமை, மடலவிழ்–மேன்
மேலுயர்ச்சியணி, பிறிதினவிற்சியணி... 600
39. புடவர, மங்கையர், கலைநிலா, ஐந்தரு
நீழல், இங்கிவர்—தகுதியணி, உய்த்
துணர்வணி, பிறிதினவிற்சியணி, பிரி
நிலை நவிற்சியணி, மருளுருவகம். ... 614
40 பற்றிய, கடிமலர்க், முருக்கிதழ், இன்
னணங். ... 627
41 ஆற்றல்சா, வையக, என்றவர், அன்றி
யும், வேயினை.—தகுதியணி. ... 643
42 என்றிவன், மாதுகண். ... 659
43 இன்னண, எய்திய, மழைமதர், வடுவகி,
மாங்குயிற், அவ்வுரை, காரிகை. ... 675
44 இலக்கணம்:—ண் + இடையினமெய்;
ண்+மெல்லினம். ண்+
வல்லினம். ... 691
45 ,, ண் + தகரமெய். ன்+இடை
யினம். ன்+மெல்லினம். ... 708
46 ,, ன்+வல்லினம். ... 727
47 ,, ன்+தகரமெய். ... 746
48 ,, ல்+இடையினம், ல்+மெல்லினம். 755
49 ,, ல்+வல்லினம், ல் +தகர மெய்.... 778
50 ,, ள்+இடையின, மெல்லின,
வல்லினங்கள். ... 785

நம்மாழ்வார் வைபவம்.

26, 27, 29. 6-ம் பத்து, 8-ம் தசகம்—
"பொன்னுலகு" 407, 430, 454.
30, 31, 32, 34. ,, 9-ம் தசகம்—

இதழ் பக்கம்

"ரோய் நிலனுய்" 470,485,510,540.
35,36,37,40,41,42,43. 10-ம் தசகம்—
"உலகமுண்ட" 551,568,586,638, [651,668,685.
44, 46, 47. 7-ம் பத்து, 1-ம் தசகம்—
"உண்ணிலாவிய" 699,728, 744.
48, 49, 50. " 2-ம் தசகம்—
"கங்குலும் பகலும்" 761,778,793.

அப்பர்

அப்பர்—64 கலை—31. இதிகாசம்.

26 இராமன் சரிதை-சில ஐயம் (கம்பரும் வால்மீகியும்) ... 408
28 சில ஐயங்களுக்கு விடை. 448
29 இராமன்சரிதை-இராவணன் நற்குணம்... 462
33 " இராவணன் சீதையை வெளவியது பாதகமா? ... 520
35 " ஐயமும் அமைதியும். ... 555
37 " இராவணன் போக்குந் தேவார நோக்கமும். ... 589
38 பாண்டவ கௌரவர் சரிதை-சூரபன்மனும் இராவணனும் புண்ணிய புருடர் ... 603
39 " இதிகாசம் யாதும் தீயோர் சரிதையன்று. ... 617
40 " பாரதக்கதை, நர-நாராயணர் விஜயம். ... 637
43 " நரன் தன்மையும் அப்பர் தேவாரமும். ... 682

இரவீந்திரநாதர் கட்டுரைகள்

26,28,32,33, 34,35,36,37. } தபோவனம் { 405,438,503,525, 536,557,573,586.

மதுரைக் கோவை.

26 மணவணி:—நகரணிமி னென்றல், எரிவலஞ் செய்யு மியல்பு கண்டு தோழியுரைத்தல், உழையர் வாழ்த்து, நெஞ்சு தளைய விழ்ந்த புணர்ச்சி கூறல்.
இல்லிருத்தல்:—மணமனைச் சென்ற செவிலிக்குத் தோழி கூறல், மணமனைச் சென்ற செவிலி நற்றாய்க் குரைத்தல், இருவர் காதலு மருவுதலுரைத்தல்.
மணச்சிறப்பு:—கருப்பத்தமைதி கண்டு இறைமகிழ்தல், வெள்ளணி வியந்துகூறல்.—415
27 பரத்தையிற் பிரிவு:—கண்டோர் கூறல், தோழி தலைவியைப் புகழ்தல், சுட்டொடு புலம்பல், இறைவன் பரத்தமைக் கிரங்கல், கனவுகண்டழுங்கல், தோழிதலைவனையியற் பழித்தல், தலைவி யியற்பட மொழிதல், தலைவன் தலைவியை நினைதல், தலைவன் றோழியை வாயில் வேண்டல், தோழி வாயின் மறுத்தல், தோழி தலைவியை வாயி னேர்வித்தல், தலைவி வாயினேர்தல், தலைவி தலைவனோடு ஊடியுரைத்தல், கலந்துழி மகிழ்தல், விருந்தொடு வந்தமை கண்டு ஆறிய தலைவியைக் கண்டோர் கூறல், புதல்வனொடு வந்தமை தோழி தெளிவித்தல், தலைவனை முனிதல். —428
28 பரத்தையிற் பிரிவு:—இன்னுத் தொலையச் சூளெடுத்தற்கட் டலைவிகூறல் தலைவி, பரத்தையை யானையாகச் சேடித்தல், தலைவி தலைவனொடு புலந்து கூறல், தலைவி புலவிதீர்தல், பாலனைப் பழித்தல், புதல்வனை முனிதல், புதல்வனை வினுதல், புதல்வனை வற்புறுத்தல், செவ்வணி விடுத்தற்குத் தலைவி யிரங்குதல், செவ்வணி யியற் பணித்தல், பாணன்வரவுகண்டு தோழியுரைத்தல், பாணன் முனிதல், பாண னிரந்து கூறல், தலைவியிற்பரத்தையைப் பழித்தல், இற்பரத்தை தலைவியை இகழுதல், சேரிப்பரத்தை புனலாடுமிடத்துக் கூறல், இற்பரத்தை மேம்பாடு கூறல், புனலாடிவந்த தலைவனொடு தலைவி யூடி யுரைத்தல், தலைவி தலைவனொடு புலத்தல், புலவி நுணுக்கம், கலவி நலமுவத்தல். —447.
29. வினைமேற் பிரிவு:—வினைமேற் பிரிகின்றமை தலைவன் தோழிக் குரைத்தல், வினைமேற்பிரிந்தமை தோழி தலைவிக் குரைத்தல், தலைவன் பிரிந்தமை கேட்டுத் தலைவி புலம்பல், கூதிர்க்காலங் கண்டு வருந்தல், பனிக்காலங் கண்டு வருந்தல், இளவேனிற்காலங் கண்டு வருந்தல், கார்கண்டு வருந்தல், பருவமன்றென்றல், பாசறையுருவெளி, விரைவது பயன், தலைவன் றேர்வர வுரைத்தல், மறவாமை கூறல்.
உற்றுழிப் பிரிவு:—தலைவ னுற்றுழிப்பிரிந்தமை கூறல், பிரிவாற்றாமை கூறல், பருவங்கண் டிரங்கல். —456.
30. இணங்கலர்ப் பொருத்தம்:—இணங்கலர்ப் பொருத்தப் பிரிகின்றமை தலைவன் தோழிக்குரைத்தல், பருவங்கண்டிரங்கல், தலைவன் வந்தமை தோழி தலைவிக் குரைத்தல்.
பொருண்மேற்பிரிவு:—தலைவன் பொருள் வயின் பிரிகின்றமை தோழி தலைவிக் குரைத்தல், தோழி செலவழுங்குவித்தல், தலைவன் பொருள்வயின் பிரிந்தமை தோழி தலைவிக்குரைத்தல், மாலைப்பொழுது கண்டு வருந்தல், இரவி னீட்டம், தலைவியைத்தலைவன் சுரத்திடை நினைதல், தலைவன் சுரத்திடை நெஞ்சொடு கூறல், தலைவன் றலைவி வருத்தம் நினைந்து கூறல், காரொடு கூறல், தோழி தலைவிக்குப் பொருள் வரவுரைத்தல், தலைவன் வருத்தந் தீர்ந்து கூறல்.
ஓதற் பிரிவு:—தலைவன் றோழிக் கோதற்பிரிவுணர்த்தல், தோழி தலைவனொடு பிரிந்தமை தலைவிக்குரைத்தல், தலைவி பிரிவாற்றாமை கூறல், தலைவன் வந்தமை தோழி தலைவிக் குரைத்தல், கலந்துழி மகிழ்தல், தலைவனது உறவு நினைதல். —474

இரவொன்றிற் பல பிழைகள்.

Goldsmith's—She Stoops to Conquer.

26, 27, 28, 29.	அங்கம் 4.	களம்.	1.	410, 421, 439, 457.
30.	" 5.	"	1.	472.
31.	"	"	2.	489.
32, 33.	"	"	3.	501, 522.

இ ர த் ந ா வ ளி.

ஹர்ஷதேவர் எழுதிய வடமொழி நாடகத்தின் வழிபற்றி யெழுதியது.

44.	அங்கம் 1.		... ...	701.
45.	" 2.	களம்.	1. 2. 3. 4.	712.
46.	"	"	5. ...	731.
47.	" 3	"	1. 2. 3. 4. 5.	739.
48.	அங்கம் 3.	களம்	6.	758.
49.	" 4.	"	1. 2.	774.
50.	" 5.	"	1. 2.	787.

KALANILAYAM
REG. NO. M. 2324.

ஸ்ரீ தியாகராஜ கீர்த்தன மணிமாலை.

இதழ்		பக்கம்
27.	எநோமு நோசிதிமோ. (புந்நாகவராளி)	424.
30.	எவரிதோ நேநெல்புது (கோகிலப்பிரியை)	476.
31.	ஏமனி நெரநம்மு கொந்துமு (ஸௌராஷ்ட்ரம்)	494.

சூளாமணி.

32, 34, 35, 36.	குமார காலச் சருக்கம்.	506, 534, 549, 574.
38, 39, 40, 42, 44, 45, 46, 49.	இரதநூபுரச்சருக்கம்.	602, 618, 634, 665, 697, 716, 734, 781.

வில்லி பாரதம்.

32, 36, 38.	கர்ணன் மாண்பு.	508, 570, 598.
42, 43.	வீடுமன்.	666, 680, 748.
47, 48, 49, 50.	தருமன் மாண்பு.	763, 779, 795.

சிறு கதை.

29.	பயனின் பயன்.	459.
34.	வேண்டுவே வேண்டா.	543.
38.	அதுவும் இல்லை.	606.
39.	ஆட்டாரோ அந்தத் தலை.	622.

ஆராய்ச்சிக் கட்டுரைகள்.

இதழ்		பக்கம்
27, 30, 31, 32, 33, 34.	காலம்.	453, 469, 492, 504, 523, 541
39, 40, 41,	தற்காலக்கொள்கைகளுந் தமிழும்	621, 635. 653.
42, 43.	சம்பந்தர் காலத்திய தமிழ் மங்கையர்	668, 684.
45.	தமிழ்நாட்டு வணிகர்	... 717
47, 48, 49, 50.	அண்டங்கள்.	751, 764, 782, 796.

பிற விடயங்கள்.

32	மாலையுங் காலையாமோ—மலர்வனம்.	... 414
63	சமுத்ர சரணுகதி.	... 526
35	நகைவெறி—மலர்வனம்.	... 559
37	நாமகள் ஆசிரிய விருத்தம்.	... 585
38	புன்னைத் தங்கை—மலர்வனம்.	... 608
41	மூடர்களின் மூளை.	... 644
43	நால்வகைப் பாக்களும் நாற்குல மக்களும்	686
	புயலின் கொடுமை.	... 687
45	கழையோடைக் கண்ணகி வருகைப்பத்து	714
46	தனிப்பாடல்கள்.	... 735

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.

1933 Results.

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000

The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Consult
NATIONAL FIRE AND GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.

A sound Company.

Please apply for particulars to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யுரன்ஸ் கம்பெனி, லிமிடெட், சென்னை.

ஹெட் ஆபீஸ்:—சென்னை. 1906ஞ ஸ்தாபித்தது.

யுனைடெட் இந்தியாவில், லைப் இன்ஷுயரன்ஸின் சிறந்த பயன்கள் குறைந்தசெலவில் கிடைக்கும்.

யுனைடெட் இந்தியாவில் பாலிஸி எடுத்துக்கொள்வது மிகச்சிறந்தஇன்வெஸ்ட்மெண்டும்,வயது காலத்திற்கும் குடும்பத்திற்கும் இணையற்ற ஆதரவும் ஆகும்.

யுனைடெட் இந்தியாவே, தென்னிந்தியாவில் மற்றெல்லாக் கம்பெனிகளுக்கும் முன்னுல் ஸ்தாபித்தது.

யுனைடெட் இந்தியா முற்றிலும் பத்திரமானதும் கெட்டிதிட்ட முடையதும் ஆன கம்பனி.

ஹெட் ஆபீஸ்:— **செம்புதாஸ் தெரு, சென்னை.** அல்லது இந்தியா, பர்மா, ஸிலோனில் உள்ள பிராஞ்சுகள்

இவைகளுக்கு எழுதி முழு விவரமும் இது பற்றிய பிரசுரங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

சிறந்த பலவிருத்தி ஔஷதம்

சென்ற 53 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று உலாவி வருகின்றன.

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

மலச்சிக்கல், தேகஅசதி நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும்.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1

இனும்! **“ காம சாஸ்திரம் ”** இனும்!!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)